OFFICE

★ விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

— வெள்ளி விழா ஆண்டு —

மலர் 25 தை 23 ஜ. அல் 3 இதழ் 855
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 6-2 84

# பெரு வெள்ளம்! கிழக்கு பெரும் பாதிப்பு!!

(நமது நிருபர்கள்)

தொடர்ச்சியாகப் பெய்துகொண்டிருக்கும் பெருமழையினால் நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. கிழக்கு மாகாணத்தில் மட்டும் இரண்டரை லட்சம்பேர் வெள்ள அகதிகளாகிவிட்டனர் என்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து கடந்த மூன்றுதினங்களாக பெய்துவரும் அடைமழையினால் பலபகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதனால் தாழ்ந்த பகுதியில் வாழும் மக்கள் பாதுகாப்பான இடத்திற்கு சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் பஸ்நிலையம் நேற்று நண்பகல் முக்கால் பகுதி வெள்ளத்தில் மூழ்கியதால் பிரயாணிகளுக்கு பெரும் சிரமம் ஏற்பட்டது. பஸ் நிலையக் காரியாலயத்தைச் சுற்றி இரண்டு அடி வெள்ளம் நிற்கிறது.

நரிக்குண்டுகுளம் நிரம்பியுள்ளதால் அயல்பகுதி வீடுகளைச் சுற்றி வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

நாயன்மார்கட்டு குளம் நிரம்பியுள்ளதால் பக்கத்திலுள்ள தோட்டப்பகுதி எங்கும் ஒரே வெள்ளமாக காணப்படுகிறது. பலவீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது.

அரியாலை பகுதிகளில் வயல் எல்லாம் வெள்ளக்காடாக காட்சியளிக்கிறது. பெரும் பகுதி வயல்களில் நெற்கதிர்கள் வெட்டப்படாமல் வெள்ளத்தில் மிதந்து கொண்டிருக்கிறது.

முனீஸ்வரன்வீதி, கச்சேரி நல்லூர்வீதி, அத்தியடி புது வீதி மற்றும் பலவீதிகளில் நேற்றும் இரண்டு அடிக்கு மேல் வெள்ளம் தேங்கி நிற்கிறது.

கடந்தவாரம் குறுணிக்கற்கள் போடப்பட்ட குழிகள் எல்லாம் தொடர்ந்துமழை பெய்ததினால் மீண்டும் பெரியகுழிகளாகிவிட்டன. வீதிகளெல்லாம் குறுணிக் கற்களாக காணப்படுகிறது.

நாவற்குழி, கைதடி பகுதிகளில் பல வீடுகளைச் சுற்றி வெள்ளம் காணப்படுகிறது. கைதடி அகதிகள் முகாமைச் சுற்றியும் வெள்ளம் நிற்கிறது. வடமராட்சி, தென்மராட்சி பகுதிகள் எங்கும், வெள்ளம் ஏற்பட்டுள்ளது. பல இடங்களில் தென்னை, பனைமரங்கள் வேருடன் வீழ்ந்துள்ளன செம்மணி சுடலை வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

யாழ்ப்பாணம் ஆரியகுளத்தில் நீர்மட்டம் அதிகரித்து வருவதால், அயலில் உள்ள வீடுகளைச்சுற்றி வெள்ளம் அதிகரித்து வருகிறது. நாவாந்துறை, பொம்மைவெளி பகுதிகளிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்து பெய்து வரும் மழையினால் விவசாயிகள் அச்சமடைந்துள்ளனர்.

### வழக்கத்துக்கு மாறாக

வடக்கில் இம்முறை மூன்றுவது முறையாக, மாதம் ஒரு முறை வீதம் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

டிசம்பர் மாதக் கடைசியில் வழக்கம்போல ஒருமுறைவெள்ளம் ஏற்பட்டது பின்னர் ஜனவரி மாதப் பகுதியில் திடீரெனப் பெய்த பெருமழையினால் சில பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டது. மீண்டும் பெப்ரவரி முற்பகுதியில் இம்முறை வெள்ளம் ஏற்பட்டது.

### பஸ் சேவை சீரில்லை

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால், தீவுப் பகுதியில் சில பஸ் சேவைகள் நேற்று நடைபெறவில்லை.

முல்லைத்தீவிலிருந்து மாங்குளம் வழியாகவும், புதுக்குடியிருப்பு வழியாகவும், யாழ்ப்பாணத்திற்கு வரும் பஸ்கள் எதுவும், நேற்று வந்துசேரவில்லை.

திருகோணமலையிலிருந்து நேற்று பிற்பகல் யாழ்ப்பாணம் வரும் பஸ்ஸும் வந்து சேரவில்லை வழியில் பல இடங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதால், பஸ் சேவைகள் நடைபெறவில்லை.

[8-ம் பக்கம் பார்க்க

# ● திருமலை துறைமுகத்தில் கப்பல் எரிகிறது!

## அணைக்கும் முயற்சி கைவிடப்பட்டது!

(திருகோணமலை)

**திருகோணமலைத் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த கிரேக்க கப்பலான 'எடிஸா' பெரும் ஜுவாலை விட்டு எரிந்துகொண்டிருக்கிறது!**

நேற்று முன்தினம் இக்கப்பலில் ஏற்பட்ட தீ நேற்று இரவு வரை இச்செய்தி அச்சுக்குப்போகும் வரை எரிந்து கொண்டிருந்தது.

தீயை அணைப்பதில் ஈடுபட்ட கடற்படையினர் தங்களது முயற்சியை நேற்று மாலை கைவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பலுடன் இணைக்கப்பட்டிருந்த வேறு மூன்று கப்பல்கள் துறை முகத்திலிருந்து வெளியேற்றப்பட்டன.

மர்மமான முறையில் நிகழ்ந்த இத் தீ விபத்தினால் கப்பலுக்கு ஏற்பட்ட சேத விபரம் குறித்து உடனடியாக அறிவிக்கப்படவில்லை.

## 'இன்ரசிற்றி' நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இருந்து புறப்படும் இன்ரசிற்றி ரயில் வெள்ள நிலைமை காரணமாக நேற்று ஓடவில்லை. இன்று நிலைமையைப் பொறுத்து சேவை நடைபெறுமெனத்

[8-ம் பக்கம் பார்க்க]

# 'அமிர்', சம்பந்தன் நாடு திரும்பினர்

## வட்டமேசை மகாநாடு இன்று மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்பில் இன்று மாலை மீண்டும் நடைபெறும் வட்டமேசை மகாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டு தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கமும், திருகோணமலை முன்னாள் எம். பி. திரு. ஆர். சம்பந்தனும் நேற்றுக் காலை விமானமூலம் சென்னையிலிருந்து கொழும்பு திரும்பினர்.

### எம். ஜி ஆருடன் ஆலோசனை

திரு. அமிர்தலிங்கம் கொழும்பு திரும்புவதற்கு முன்னர் நேற்றுக்காலை தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனைச்சந்தித்து வட்டமேசை மகாநாடு தொடர்பாக ஒரு மணித்தியாலம் அவருடன் ஆலோசனை நடத்தினார்.

(8-ம்பக்கம்பார்க்க)

# கிளிநொச்சி செயலகம் இன்று திறக்கப்படும்!

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தை அரசாங்க அதிபர் திரு. என். ஜயநாதன் சம்பிரதாய பூர்வமாக இன்று காலை திறந்து வைப்பார்.

கிளிநொச்சி பழைய நெற் சந்தைப்படுத்தும் சபை அலுவலகத்தில் அமைந்துள்ள புதிய செயலக திறப்புவிழாவிற்கான ஏற்பாடுகளை உதவி அரசாங்க அதிபர் திரு. க. குணராசா செய்துள்ளார்.

காலை 6 மணிமுதல் 8 மணி வரை பூசைவழிபாடு நடை

(8-ம பக்கம் பார்க்க)

## இடம் பெயர்ந்த மாணவர் பிரச்னை!

# "ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவை உடன் கூட்டவும்"

## மாணவர் ஒன்றியம் கல்பகேயிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவை உடனடியாகக் கூட்டுமாறு இடம்பெயர்ந்த பல்கலைக்கழகத் தமிழ் மாணவர் ஒன்றியம் உயர்கல்வி அமைச்சின் செயலாளரை தந்தி மூலம் கேட்டுள்ளது.

வடக்குகிழக்கில் உள்ள பீடங்களில் இடம்பெயர்ந்த மாணவரை அனுமதிப்பதற்கும் புதிய பீடங்கள் அமைப்பது பற்றி ஆராய்ந்து முடிவுசெய்து நடைமுறைப்படுத்தவும் இக்குழு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டது.

உடனடியாக இக்குழுவைக் கூட்டுமாறு கோருவதென்றும் இக்குழுவுக்கு பயில விரும்பும் இடம்பெயர்ந்த மாணவரின் பெயர்விபரங்களை உடனடியாகச் சமர்ப்பிப்பது என்றும் ஒன்றியம் முடிவுசெய்துள்ளது.


இக்குழுவில் உள்ள மாணவர் பிரதிநிதிகளின் பெயர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. த. தயாபரன், எஸ். சிவநாயகம், எஸ் சிவராம் (மட்டக்களப்பு) ஆகியோர் குழுவுக்கு தெரிவாகினர். (கு)

யாழ் மாநகரில் இன்று மங்களகரமான

★ திறப்பு விழா ★

றட்னம் பார்மஸி & குரோசரி





இன்று (6-2-84)
திங்கட்கிழமை
11-30 முதல்
12 மணி வரை
வரும் சுபவேளையில்

யாழ். ஆஸ்பத்திரி வீதி
இலங்கை வங்கி
பிரதம முகாமையாளர்

திரு. மு. கனகரத்தினம்
அவர்களால்

மங்கள விளக்கேற்றி
ஆரம்பித்து
வைக்கப்படும்.

புதிய கடைத் திறப்புவிழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சகல மருந்து வகைகளையும் சாப்புச்சாமான்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

RATNAM PHARMACY & GROCERY

388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இன்று முதல் சேவ்டி ட்ரவல்ஸ் (காரைநகர்—யாழ்—கொழும்பு பஸ்சேவை) டிக்கட்டுகளையும் எம்மிடம் பதிவு செய்துகொள்ளலாம். (576)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சமீபத்தில் இங்கிலாந்தில் இருந்து கொண்டுவரப்பட்ட Leyland Sherpa 240 Deluxe Diesel Delivery Van 1978ம் ஆண்டு மொடல் (கலனுக்கு 35 மைல் வேலை செய்யக் கூடியது) விற்பனைக்கு உண்டு. நேரில் பார்வையிடலாம். தொடர்புகொள்ளும் முகவரி ஆ. சுந்தரலிங்கம் 85, கொழும்புத்துறைவீதி, யாழ்ப்பாணம். ரெலிபோன் யாழ்ப்பாணம் 22153 அல்லது 24019, 22254 (622)

புதிய Stereo Cassette Tuner Amplifier (Model-J-3, Hitachi) உடன் புதிய Electro-35 (Yashica) Camera ஒன்றும் விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு தி. கிருஷ்ணகுமார், "வளர்மதி" பொற்பதிரோட், கோண்டாவில்கிழக்கு. 574

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும், யூனியன் கல்லூரிக்கு மையமாகவும் சைவப் பிரகாச வித்தியாசாலைக்கு அருகாமையில் மின்சார வசதியுடன் வீடு கட்டுவதற்கு உகந்த காணி 3—4 பரப்பு விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. பரமநாதன், கீரிமலை வீதி, மாவிட்டபுரம். 597

நல்லூர் கல்விக் கந்தோருக்கு அருகாமையில் சகல வசதிகளடங்கிய புதிய வீட்டுடன் இரண்டுபரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு, 61, செல்லர் ரோட், நல்லூர். பி. ப. 4-00 மணிக்குப் பின் நேரில் சந்திக்கலாம். 608

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி றக்கா லேனில் சகலவசதிகளும் கொண்ட இடத்தில் 2½பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு 1/1, றக்கா லேன், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 604

மரக்கடைச்சல் மெசின் விற்பனைக்குண்டு. கிழமை நாட்களில் பார்வையிடலாம். தொடர்பு கொள்ளவும். கிங்ஸ் ரெயிஸ் 76, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 606

கோப்பாய் வடக்கு பருத்தித்துறை வீதிக்கருகாமையில் பூதர் மடத்திற்கு பின்புறமாக 12 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. வீடுகட்டவும் தோட்டம் செய்வதற்கும் ஏற்றது. சச்சிதானந்தன் சால் நடை வைத்திய நிலையம் பருத்தித்துறைவீதி, கோப்பாய்வடக்கு. 607

சுன்னாகம் தெற்கு பூதராயர் கோவிலடியில் சிவசாயக் காணி வீடு கட்ட, தொழிற்கூடம் அமைக்க உகந்தது பரப்பு 10—12. விபரம்: மாலை 3—5 மணிக்கு. S. P. சிவஞானம், இலங்கை வங்கி ஒழுங்கை, சுன்னாகம். 598

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கு முன்பாக மூன்று கடை வீட்டுடன் சேர்ந்த காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு S. தம்பிராஜா, 131, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம். 628

அரியாலையில் தென்னை, மாமரங்களுடன் ஆறு பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. கா. ஜெகநாதன், சட்டத்தரணி, திருநெல்வேலி அல்லது அரியநாயகம், சட்டத்தரணி, ஏழாலை. 634

## தேவை

பட்டு நெசவு வேலை செய்வதற்கு பெண்கள் தேவை. விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும். வசந்தபுரம் சில்க்ஸ், 75/11, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 491

மரக் கடைச்சல் வேலையில் மிகுந்த அனுபவமுடைய ஆண் அல்லது பெண் தொழிலாளர் தேவை. அனுபவத்துக்குத் தகுந்த சம்பளம் வழங்கப்படும். 10ம் திகதிக்கு முன் காலையில் நேரில் வரவும். எரோ எலெக்றிக்கல் இண்டஸ்றீஸ் மின்சார நிலைய வீதி, சுன்னாகம். 613

சீமெந்துக்கட்டியால் கட்டடங்கள் கட்டக்கூடிய மேசன்மார்களும் கூலி ஆட்களும் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். குமார் என்ரபிறைஸஸ் மாதகல் வீதி, பண்டத்தரிப்பு. 610

திறமை, அனுபவமிக்க, சகல அச்சுகோர்க்கும் வேலைகளும் தெரிந்த கொம்பஸிட்டர் தேவை. நேரில் வரவும். சித்திரா அச்சகம் இல: 310, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 624

புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் இண்டஸ்றீஸ்க்கு இனிப்பு - ரொபி செய்வதில் முன் அனுபவமுள்ள தொழிலாளர்கள் எதிர்பார்க்கும் ஊதியத்துடன் 15-2-84க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 544 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். 544

I.C.M.A. அல்லது I.A.B. வரை படித்த அல்லது இரண்டு வருடம் கணக்குத்துறையில் அனுபவமுள்ள Accounts Clerk தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம், தமயந்தி அச்சகம், மானிப்பாய். 621

## தேவை

சாவகச்சேரி நகரில் வாடகைக்கு இரண்டு மூன்று படுக்கை அறைகள் கொண்ட வீடொன்று மின்சார, தண்ணீர் வசதிகளுடன் தேவை. தொடர்பு: சரவணமுத்து, கென்ஸ்மன்லேன், சாவகச்சேரி. 611

சகல அச்சக வேலைகளும் தெரிந்த மெசின் மைண்டர் தேவை. நேரில் வரவும் அல்லது விண்ணப்பிக்கவும். தமயந்தி அச்சகம், மானிப்பாய். 620

## சேவை

எமது ஸ்ருடியோவில் வாங்கும் கலர் பிலிம் சுருள்களை எம்மிடம் Processing and Printing செய்து 24 படங்களுக்கு மேல் பெற்றுக்கொண்டால் ஒரு கலர் பிலிம் சுருள் இனாமாக வழங்கப்படும். Processing ரூபா 30/- P. C. Printing ரூபா 6/50 கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். 502

## புங்குடுதீவு—நயினாதீவு பல நோ. கூ. சங்கம்

## வெற்றுச் சாக்கு விற்பனை

எம்மிடம் 6000 வெற்றுச் சாக்குகள் வரை கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைசெய்ய இருக்கிறது. விண்ணப்பப் பத்திரத்திற்கு 5/-ம் வைப்புப் பணமாக ரூபா 250/-ம் செலுத்திக் கேள்விப் பத்திரங்களை பெற்று 8-2-84ம் திகதி அன்று அல்லது அதற்குமுன்னதாக பதிவுத்தபால் மூலம் பொதுமுகாமையாளர், புங்குடுதீவு—நயினாதீவு பல நோ. கூ. சங்கம், புங்குடுதீவு என விலாசமிட்டு அனுப்புதல் வேண்டும்.

என்பலப்பின் இடதுபக்க மூலையில் "கேள்விப்பத்திரம்" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்.
புங். நயி. பல. நோ. கூ. சங்கம்,
புங்குடுதீவு
618

## 31-வது நாள் நினைவஞ்சலி

### திரு. ஐயாத்துரை சங்கரப்பிள்ளை

(யாழ்ப்பாணம் றேடிங் கொம்பனி உரிமையாளர்)



மலர்வு:
24-10-1922

உதிர்வு:
8-1-1984

தந்தையே எம் அன்புத் தெய்வமே எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே நியதிப் பிரகாரம் எம்மை விட்டுப் பிரிந்து ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு நீங்கள் மீளாத்துயில் கொண்டு விட்டீர்களே அப்பா. அப்பா என அழைத்தால் அன்போடு அரவணைப்பீர்களே இனியார் வந்து ஆறுதல் சொல்வார்? அப்பாவின் இறுதிக் கிரியைகளில், நேரில் கலந்து கொண்டு ஆறுதல் அளித்தவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் கலந்து கொள்ள முடியாது வருந்தியோருக்கும், எமது உளமார்ந்த நன்றியை தெரிவிப்பதோடு, 6-2-84 (திங்கட்கிழமை) அந்தியேட்டி கிரியைகளைத் தொடர்ந்து 7-2-84 (செவ்வாய்க்கிழமை) நடைபெறும். வீட்டுக்கிரியைகளில் கலந்து எங்கள் அன்புத்தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கும்

மனைவி, பிள்ளைகள்.

"கலாபவனம்"
நாவடி தெற்கு,
கொக்குவில். 542

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

தெல்லிப்பழை கிழக்கு காலம்சென்ற கதிரித்தம்பி நாகரத்தினத்தின் மரண சாதனமற்ற சொத்துக்கள் பற்றிய விடயம்.

மரணமெய்தியவர் நாகரத்தினம் கைம்பெண் மகேஸ்வரி, பிரதானவீதி, தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை.

மனுதாரர்

வழ. இல. தத்துவம்/186

எதிராக

1. நாகரத்தினம் சிவகுமாரன் தெல்லிப்பழை கிழக்கு, தற்போதய விலாசம் பெடில் றசேயர் ரோட்டு, சிங்கப்பூர்.
2. நாகரத்தினம் சிவகுகன் தெல்லிப்பழை கிழக்கு தற்போதய விலாசம் பேடக் பல்கலைக்கழகம், இஸ்டியாரு ஐக்கிய அமெரிக்கா.
3. நாகரத்தினம் சிவசங்கரி தெல்லிப்பழைகிழக்கு, தெல்லிப்பழை.

எதிர்மனுதாரர்கள்

மேற்குறித்த இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984ம் ஆண்டு சித்திரைமாதம் 4ம் திகதி அன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றனர்.

1984ம் ஆண்டு மாசி மாதம் 1ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,
சுப்பிரமணியம் வேலாயுதம்,
பதிவாளர்.

வரைவு:
V. S. கணேசலிங்கம்,
மனுதாரரின் சட்டத்தரணி.
594

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம்கந்தர்மடம் இல. 16, பளம்ரோட்டைச் சேர்ந்த நாகலிங்கம் சிவலிங்கம் என்பவரின் மரண சாதனமில்லாச்சொத்தின் விடயமாக.

நாகலிங்கம் சிவலிங்கம் கைம்பெண் ஜெயரஞ்சிதம், இல. 16 பளம் ரோட்டு, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

மனுதாரர்.

மரணசாதன நியாயாதிக்கம். இல. 3766

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதிலதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984ம் ஆண்டு தை மாதம் 20ந் திகதி முற்பகல் 9மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்டபின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுக்கப்படலாகாதென்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக்கட்டளைப்படி,
(ஒப்பம்)
கே. குலசிங்கம்,
பதிவாளர்.

தேதி 16-11-83.
20-1-84
காரணம் காட்டும் திகதி 30-3-84க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

(ஒப்பம்)
கே. குலசிங்கம்,
பதிவாளர்.

மனுதாரரின் சட்டத்தரணி
R. சிவசுப்பிரமணியம்,
230, சேர். பொன்.
இராமநாதன் ரோட்,
யாழ்ப்பாணம். 560

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## Dr. THILLAYAMPALAM INSTITUTE

2 Years Diploma / 6 Months crash Course in General Cookery, Icing, Dress Making, Embroidery, Handicrafts etc.
Classes in Shorthand and Typewriting Centre for Pitmans Exams.
For further details contact:

The Principal,
Chundikuli Girls' College,
Jaffna,

An Exhibition and Sale will be on 11-02-1984.
ADMISSION FREE 617

## மலிவுக் கட்டணத்தில் ஓர்
## அரிய சந்தர்ப்பம்

✯ Basic ✯ Cobol ✯ Fortran

(ஒவ்வொரு பாடத்திட்டத்திற்கும் கட்டணம் 1000/-)

வடமாகாணத்தில் அதிக சக்தி வாய்ந்ததும், புத்தி கூர்மையுள்ள பாரிய Computerஇல் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

✯ I. D. P. M. (Lon - Exam)
பகுதி I, II ஜூன் 84.

✯ ஏயர் கொண்டிசனிங் பயிற்சி
(Air Conditioning)

தொடர்பு கொள்க:
Auto Cool Engineers
சாந்தி சினிமா அருகாமை
யாழ்ப்பாணம்.
633

### மணிவாக்கு

அக்கிரமத்தைத் தடுக்கும் ஆற்றல் இருந்தபோதும் அதனைத் தடுக்காதவன் அதற்கு ஊக்கமளிக்கிறான் என்று உணர்க.

—செனக்கா

## நமது நோக்கு

# வான விளையாட்டும் வாண விளையாட்டும்

“நாமெல்லோரும் ஒரு நாட்டு மக்கள்; இந்த நாட்டு மக்கள்’’ என்ற செய்தியை இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனா இவ்வருட சுதந்திர தினத்தில் வற்புறுத்தியிருப்பதற்குக் காரணம் கண்டுபிடிக்க வேண்டிய அவசியமில்லை; இந்த ஞானம் கடைஞானமோ வென்று அஞ்ச இடமுண்டு.

நாமெல்லோரும் ஒரே உலகின் மக்கள் என்பதை உணர்ந்த சோவியத்ரஷ்ய தலைவர் பிரஸ்னேவ் அளித்த விகடக்கருத்து நுட்பமானது; வலுவுடையது.

இஸ்ரேலின் பெண் பிரதமர் அமரத்துவம் அடைந்த திருமதி கோல்டா மெயர் தமது 70வது பிறந்த தினக் கொண்டாட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாக தமது நாட்டின் ஜென்ம எதிரியெனக் கொள்ளப்பட்ட சோவியத் ரஷ்யாவுக்கு விஜயம் செய்தார்.

எதிரியை நேசிப்பதே கிறிஸ்துவ கருணை என்பதை இவ்விஜயம் விளக்குமென்பது அம்மையார் கோல்டாவின் அடித்தள உணர்வெனலாம்.

தலைவர்கள் இருவரின் கருத்துப்பரிமாறல் முடிவடைந்ததும், “அன்பின் நண்பி கோல்டா! இன்று உமது 70வது பிறந்தநாள்; என்னால் ஆக வேண்டியதென்ன? சொல்லும், அப்படியே அது உமதாகும்’’ என்றார் பிரஸ்னேவ்.

வையின் குறிப்பிட்ட மனிதவாழ்வின் எல்லை-70 ஐ பூர்த்தி செய்த இஸ்ரேல் பிரதமர், பிரஸ்னேவின் குதூகல, ஆனால் குத்தலான கோரிக்கைக்குக் கொஞ்சமும் சளைத்தவரல்லர்; இஸ்ரேல் சிறு நாடு. அதன் பிரதமர் கண்ணகி போன்ற வீரப்பெண்.

“அரும்பெரும் கொடை ஒன்றை எனக்களிக்கச் சித்தமாயிருக்கும் இப்பெருநாட்டின் பெருந் தலைவரே; இது தான் நான் கேட்கும் வரம்; முடியுமானால் நல்குக’’ என்று ஆரம்பித்த அம்மையார், “ஒரு நாளுக்காவது உங்கள் நாட்டின் எல்லைக் கதவங்களைத் திறந்துவிடுங்கள்; வெளியேற விரும்பும் அனைவரும் வெளியேறட்டும்; எஞ்சியவர் இங்கு இருப்பார்தானே’’ என்றொரு போடுபோட்டார்.

பிரஸ்னெவ்: “உம்முடைய சேட்டைக் கதை எனக்கு நன்றாகப் புரிகிறது; என்னுடன் தனிமையாக இருக்க நீர் விரும்புகிறீர்’’ என்ற உடனடிப் பதிலுடன் இந்த நகைச்சுவை நாடகம் முடிவடைந்தது

எந்தக் கஷ்டத்திலும், துன்பத்திலும் உண்மை எடுக்கும் வடிவங்களில் நகைச்சுவை மிகவும் அற்புதமானது; ஆழ்ந்த கருத்தை விளக்கித் துன்பத்தைச் சகிக்க, அதனை நீக்க வல்லது. கட்டுப்பாடின்றிச் சுதந்திரம் இல்லையென்பது இந்த ‘ஒரு உலகம்’’ என்ற நாடகத்தின் அடிப்படைக் கருத்து.

“வான்முகில் வழாது பெய்க’’ என்று வறட்சியால் பாடிய பிரதேசங்கள் பல இன்று, “பேய் மழையே போ’’ என்று கண்ணீர் வடிக்கின்றன.

நாமொன்றை நினைக்கத் தெய்வம் வேறொன்றை நினைத்து விடுகிறது என்பது இந்த விஞ்ஞான யுகத்தில் நிராகரிக்கப்படுகிறது. எனவே அதனை மாற்றியமைக்க இயற்கையில் பழி போடலாம். ஒரே நாட்டில் ஒருபுறம் கொண்டாட்டம், இன்னொருபுறம் திண்டாட்டம், ஒருபுறம் சுதந்திர தின வாண விளையாட்டு, மறுபுறம் துக்கதின வான விளையாட்டு; நாமெல்லோரும் ஒருநாட்டவரா?

இயற்கையின் நியதி இருந்த வாறென்னே!

“மனித வாழ்வு, உலகின் ஏனைய உயிர்கள் எல்லாவற்றுடன் தொடர்புடைய வாழ்வு உயிர் என்பது இயற்கை அன்னை உட்பட்ட கோட்பாடு; இவற்றில் எதனையும் பிரித்துப்பார்த்தல் அறிவுடைமையாகாது’’ என்று போதித்து வாழ்ந்து காட்டியவர் புத்தபெருமான்.

அவருடைய அருள் சுரக்கும் இந்த நாட்டில் இன்றைய கட்டத்தில் 36 ஆண்டு சுதந்திர வாழ்வில் இன்னல்கள் மலிந்து கொண்டு போகின்றன.

துன்பத்தைக் கண்டதும் துறவியான போதிநாதரின் பெயரால் இந்தச் சுதந்திரநாடு இது காலும் சாதித்ததென்ன?

வெயிலில் காய்ந்தவருக்கு வெப்பத்தின் அனுபவம் நேரடியான தென்பார்கள்.

இலங்கை ராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி பிரேமாத்மானந்தாவிடுத்த சுதந்திர தினச்செய்தி அத்தகைய அனுபவம் வாய்ந்த செய்தியென்பது தெளிவு. நாம் இன்னும் இன்ப வாழ்க்கையை அடைய முடியவில்லை. பழைய வரலாற்றைப் புரட்டுவது பலனளிக்காது! அரசியல் சித்தாந்தங்களும் நமக்கு வேண்டிய விடிவளிக்க வல்லவையல்ல; எங்கள் ஆன்மீக ஒருமைப்பாட்டால், நான்கு பெரும் சமயங்கள் போதிக்கும் பொதுலட்சியங்களே எம்மைக் கை தூக்கிவிடும்’’

இன்று நாட்டை வறுமைப்படுத்தும் பகைமையும் பொறாமையும் எமக்குள் குடி கொண்டிருக்கும் பொது எதிரியே.

தெற்கில் எழுந்த தீ மனிதனின் பொறாமைத் தீ. அதனை அணைக்க மனிதனோ தெய்வமோ முன்வரவில்லை; இன்று கஞந்துறையில் இடம் பெற்ற வாண விளையாட்டுத் தீ மனிதனின் குதூகலத் தீ; அது இந்த நாட்டில் இன்று அவசியமற்ற தென்பதை விளக்குவதே வடக்கிலும் கிழக்கிலும் எழுந்த இயற்கை அன்னையின் சீற்றம் வானம் வடிக்கும் கண்ணீர்!

நாமெல்லோரும் ஒரு உலகமக்கள் என்பதை ‘அணுக்குண்டு’ போதிக்கிறது. நாமெல்லோரும் இந்நாட்டு மக்கள் என்பதை இன்றைய வெள்ளப் பெருக்கு விளக்குகிறது. நிவாரண சேவையின் திறமையால் அதனை நிரூபியுங்கள்.

---

## இன மத ஒற்றுமையுடன் அழியும் இளைஞர் சக்தியையும் பேணும்

### பொலநறுவை இளைஞர் முகாம் குறித்து பணிப்பாளர் நாயகம் நம்பிக்கை

[இ. சந்தசாமி]

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஆதரவில் பொலநறுவையில் இம்மாதம் 25-ம் திகதி முதல் 29-ம் திகதிவரை நடைபெறும் இளைஞர் முகாம் இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் இளைஞர்களின் சக்திக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிப்பதோடு தமிழ், சிங்கள, முஸ்லீம் இளைஞர், யுவதிகள் மத்தியில் ஐக்கியத்தையும் ஒருவருக்கொருவர் புரிந்துகொண்டு சமாதானமாக வாழும் நிலையையும் ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை

இவ்வாறு தேசிய இளைஞர் சேவை மன்றப் பணிப்பாளர் நாயகம் திரு. சரித்தரத்வத்த பொலனறுவையில் நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

இளைஞர் முகாம் நடைபெற இருக்கும் பொலனறுவை றோயல் மகா வித்தியாலயத்தில் அதிகாரிகள் பத்திரிகையாளர் சகிதம் சென்று பார்வையிட்ட திரு ரத்வத்தை பொலனறுவை புதிய நகரியிலுள்ள மாவட்ட அபிவிருத்தி சபை மண்டபத்தில் பத்திரிகையாளர் மகாநாடு ஒன்றையும் நடத்தினார்.

திரு. ரத்வத்தை மகாநாட்டில் மேலும் கூறியதாவது:-

இளைஞர்களின் பங்கு எமது நாட்டின் அபிவிருத்தியில் மிக அவசியமாகின்றது. இந்நிலையில் இளைஞர்களுக்கெனச் செயல் திட்டங்கள் தேவைப்படுகின்றன. இளைஞர்களுக்கான செயல் திட்டங்களை உருவாக்கிவரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இம்முகாம் மூலம் பெரும் பலன் கிட்டும் என்றும் எதிர்பார்க்கிறது.

சர்வதேச இளைஞர் ஆண்டான 85-ல் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கான செயல்திட்டங்களும் இந்த முகாமில் தயாரிக்கப்பட உள்ளன.

கல்வி, சுயதொழில், கலை கலாசாரம்’ விளையாட்டு ஆகியன தொடர்பான விரிவுரைகள் பயிற்சி முறைகள் ஆகியனவும் இம்முகாமில் இடம் பெறவுள்ளன.

அகில இலங்கை ரீதியில் சகல இன இளைஞர்களும் இம் மகாநாட்டில் பங்குபற்ற முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதும் பயன்தரக்கூடியதுமான.

இம்முகாமில் பங்குகொள்ள வரும் சகல இளைஞர்களுக்கும் உரியபாதுகாப்பு வழங்கப்படுமென்றும் அவர் கூறினார்.

உதவிப்பணிப்பாளர் பிரசார விசாலிப்புப் பிரிவு திரு. ரஞ்சித் ஹேவா பட்டகே பொலனறுவை மாவட்ட அபிவிருத்தித் தலைவர் திரு. ஹென்றி வீரவன்ச ஆகியோரும் இம்மகாநாட்டில் பங்குபற்றினர்.

---

## ஆலய புனருத்தாரண வேலைகள்

[கரவெட்டி]

கரவெட்டி புனித. அந்தோனியார் ஆலய புனருத்தாரண வேலைகளை யாழ். ஆயர் பேரருட்திரு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை நேரில் வந்து பார்வையிட்டார்.

கரவெட்டி பங்குத் தந்தை அருட்திரு ஏ. ஞானானந்தன் அடிகளாருடனும், ஆலய நிர்வாகசபை உறுப்பினர்களுடனும் இவ்வேலைகள் பற்றிக் கலந்தாலோசித்த ஆயர் இதற்குத் தமது ஆசியை வழங்கிச் சென்றார்.

---

## உருளைக்கிழங்கு செய்கையை பாதித்த அடிஅழுகல் நோய்!

(நல்லூர்)

யாழ்ப்பாணத்தில உருளைக் கிழங்குச் செய்கையைப் பாதித்த அடி அழுகல் நோய்க்கு இங்கு விநியோகிக்கப்பட்ட விதை உருளைக்கிழங்கில் ‘பக்டீரியா’ தாக்கம் இருந்தமை காரணமாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

உருளைக்கிழங்கு அழுகல் நோய் யாழ்ப்பாணத்தில் பரவியதைத் தொடர்ந்து, அது சம்பந்தமாக ஆராய்ச்சி நடாத்திய விவசாயத்திணைக்கள ஆராய்ச்சித்துறை நிபுணர்கள், மேலிடத்துக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளதாக அறிய வருகிறது.

பேராதனையில் உள்ள விவசாய ஆராய்ச்சித்துறையைச் சேர்ந்த கலாநிதி எஸ். சிவகடாட்சம் தலைமையிலான ஒரு குழு இவ்வாராய்ச்சியினை நடாத்தியது. இப்போகத்தில் 1400 மெட்ரிக் தொன் விதை

(8-ம் பக்கம் பார்க்க)

---

## வெள்ளி முதல் கடும் மழை

# வவனியாவில் கால்நடைகள் நூற்றுக்கணக்கில் பலி!

[வவனியா]

வவனியாவில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்த மழை தொடர்ந்தும் கடுமையாகப் பெய்துவருகிறது. இந்தஅடைமழையினால் வவனியாக் குளம் உடைப்பெடுக்கும் அபாயம் காணப்படுகிறது. இதனால் வவனியா வாசிகளிடையே பீதி ஏற்பட்டுள்ளது.

கடந்த மூன்று தினங்களாகப் பெய்துவரும் மழையினால் வவனியாப் பகுதிகளிலுள்ள குளங்கள் நிரம்பியுள்ளன. பயிர்விளை நிலங்களில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது.

கால்நடைகளும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன நூற்றுக்கணக்கில் இவை இறந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

வவனியா பிரதான வீதியும் வெள்ளத்தினால் மூடப்பட்டுள்ளது இவ்வீதிவழியாகக் கொழும்புக்கும் ஏனைய இடங்களுக்கும் செல்லும வாகனங்கள் பயணத்தைத் தொடர முடியாதுள்ளது.

மதவாச்சிக்கருகில் வீதிக்கு மேலாக வெள்ளம் பாய்வதால் கொழும்பிலிருந்து வவனியாவுக்கும், யாழ்ப்பாணத்துக்கும் வந்த வாகனங்கள் அங்கே நிறுத்தப்பட்டுள்ளன.

மாங்குளம், ஓமந்தை ஆகிய இடங்களிலும் வீதிக்கு மேலாக வெள்ளம் பாய்கிறது. இதனால் வவனியா - யாழ்ப்பாணம் போக்குவரத்துக்களும் பாதிக்கப்பட்டுள்ளன. நேற்று இவ்விருவிடங்களுக்கிடையிலான மினி பஸ் சேவைகளும் இடம் பெறவில்லை. (கி)

---

உ

சிவமயம்

இன்று மகத்தான

★ திறப்பு விழா ★

கே. வி. ரி.

கதிர் வேலவன் றேட்ஸ்

6-2-84 (23 தை) திங்கட்கிழமை

காலை 9-30 — 10 30 மணி

மங்கள விளக்கேற்றல்

திரு. வி இரத்தினசோதி அவர்கள்

(முகாமையாளர் இலங்கை வங்கி வெளிநாட்டலுவற்துறை)

திறந்துவைப்பவர்

திரு எம். கனகரத்தினம் அவர்கள்

(பிரதான முகாமையாளர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)

வியாபாரத்தை ஆரம்பித்து வைப்பவர்

திரு. ஆர். வில்வராசா அவர்கள்

(முகாமையாளர், இலங்கை வங்கி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)

அன்பர்களையும், ஆதரவாளர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்

எம்மிடம் மோட்டார் உதிரிப்பாகங்களும் மின்சாரப் பொருட்களும் விவசாய உபகரணங்களும் சகாய விலையிலும் மொத்தமாகவும் இல்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்

கே. வி. ரி. ஸ்தாபனத்தார்,

65, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 631)

# நாரந்தனை - சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீசிவசுப்பிரமணிய கோவில் கும்பாபிஷேகம்

## வேலும் மயிலும் துணை

''வீரவேல் தாரைவேல்
விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள்
திருக்கைவேல் — வாரி
குளித்தவேல் கொற்றவேல்
சூர்மார்பும் குன்றும்
துளைத்தவே லுண்டே
துணை''.

''வேலும்மயிலும் துணை'' என்பது முருகனடியார்களின் தியான மொழியாகும். அவன் நாமத்தை மனமுருகிச் சொல்லும்போதே அடியவர்களின் உள்ளத்தில் அவன் புகுந்து விடுகிறான். அங்கே எழுதரிய ஆறுமுகத்தை காணலாம்; மணிநுதலைக் காணலாம்; ஈறிரு தடந்தோளைக் காணலாம்; செங்கை வேலைக் காணலாம்; திருவடியினைக் காணலாம்; கோலமயிலைக் காணலாம். அருணகிரிநாதர் போன்ற அடியவர்கள் இத்தகைய அழகுக் கோலத்தைப் புறத்திலும் அகத்திலும் கண்டு வழிபட்டனர். முருக வழிபாடுகளுக்குள்ளே வேல் வழிபாடு தனிச்சிறப்பு வாய்ந்தது. எத்தனையோ பக்தர்கள் வேலை மாத்திரம் வைத்துப் பூசிக்கின்றனர். அவன் கையிலுள்ள வேல் ஆராயும் நீதிவேலாகும். உயிர்களின் வினைகளை அப்புறப்படுத்தி உண்மையான பக்தியை அறிவதற்குக் கருவியாக அமைந்தது வேல்.

### செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

(தலைவர்:- துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை)

மக்களாய் பிறந்தோர் அனைவருக்கும் ஏற்படுகின்ற துன்பத்துக்குக் காரணம் அறியாமையேயாகும். இதனையே அஞ்ஞானம் என்றும் சொல்வர். இது எம்மோடு அநாதியாகவே கூடியுள்ளது. செம்பிலே களிம்பு எவ்வாறு அமைந்துள்ளதோ அதேபோல் உயிரோடு இந்த அறியாமையும் சேர்ந்துள்ளது. பிறவித் துன்பத்துக்கு இதுவே காரணமானது. இதனையே சைவ சித்தாந்தம் ஆணவம் என்று கூறுகிறது. ஆணவம் இருளிலும் பார்க்கக் கொடியது. இருள் தன்னையாவது காட்டிக் கொள்ளும். ஆனால், ஆணவம் தன்னையும் காட்டிக்கொள்ளாது திருவருளையுங் காணவிடாது. இந்த நிலையில் உயிர் மயங்குகிறது. ஆனால், உயிர்கள் ஈட்டிய நல்வினைவசத்தால் திருவருளுடனும் பழகுகின்ற வாய்ப்பு உண்டாகிறது. கூகையின் கண்ணுக்குச் சூரியனுடைய ஒளி தோன்றாதது போல ஆணவத்தால் மறைக்கப்பட்டிருக்கும் உயிர்களுக்கு இறைவனைக் காணமுடியாது. ஆனால், பக்குவமுள்ள உயிர்களுக்கு மெய்ஞானம் தோன்றி அஞ்ஞானம் மறைகிறது. இந்த மெஞ்ஞானத்தை உணர்த்துபவரையே ஞான குரு என்று சொல்வர். குரு என்பது ஞானமயம். ஞானம் வெளியிலில்லை. நம்முள்ளே உயிர்க்குயிராய் இருக்கிறது. எல்லாருபமும் தெய்வருபமாதலால் ஒவ்வொரு ரூபத்திற்குள்ளும் ஞானம் வெளிப்பட்டுப் பேசும்போது குருமொழியாகும். குருவடிவாக முருகன் எழுந்தருளி உள்ளத்திற் காட்சி கொடுத்ததை அருணகிரியார் பாடுகிறார்.


''திருவடியும் தண்டையும்
சிலம்பும் சிலம் பூடுருவப்
பொருவடி வேலும் கடம்பும்
தடம்புய மாறிரண்டும்
மருவடி வான வதனங்க
ளாறும் மலர்க்கண்களும்
குருவடி வாய்வந் தென்
உள்ளங் குளிரக் குதி
கொண்டனவே.''

இருள் அகலவேண்டுமாயின் சூரியன் உதயமாக வேண்டும். அதேபோல் அஞ்ஞானம் அகல வேண்டுமாயின் மெய்ஞானம் உதயமாகவேண்டும். வழிபாடே இதற்கு மார்க்கமாகும். இவ்வழியில் ஈடுபடுபவர்கள் நாரந்தனை சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலைச் சேர்ந்த அடியார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். இவர்களின் அயரா முயற்சியால் மகாகும்பாபிஷேகம் நடைபெறும் புண்ணியம் வாய்த்துள்ளது. இதுவே இப்பிறவியில் ஈட்டவேண்டிய பெரும் புண்ணியச் செயலாகும். எனவே இக்கைங்கரியத்தில் பங்குகொண்டோரை வாழ்த்தி எல்லாம் வல்ல முருகன் திருவருளைப் போற்றி அமைகிறேன்.

### நல்லாசி

நாரந்தனை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் மஹா கும்பாபிஷேகம் நிகழவிருப்பதறிந்து பெருமகிழ்ச்சியடைகிறோம். சஞ்சிதவாயிலாக நாம் செய்த புண்ணியப் பயனே கும்பாபிஷேகம் காண்பது மற்றும் வருடா வருடம் நாம் எடுக்கும் விழாக்கள் போலல்லாது பலவருடங்களுக்குப் பின் அல்லது பன்னிரண்டு வருடங்களுக்கொரு முறை எமக்குத் தரிசிக்கக் கிடைக்கும் பெரும் பாக்கியம். அதுவும் கலியுக வரதனும் முருகப் பெருமானுக்கு அமைவது விளக்குதற்கரிய சிறப்பு நாம் வாழும் இக்கால கட்டமோ மன அமைதியின்மை நிறைந்தது. எனவே முருகன் அருள் வேண்டுவதல்லால் மனச் சாந்திக்கு வேறு வழி இன்று ஒருமையுடன் மனமுருகி முருகனை வேண்டினால் நிச்சயம் பயனுண்டு. இதை அநுபவ வாயிலாகக் கண்ட அடியார்கள் பலர் இப் பெருவிழா செவ்வனே நிறைவுற ஆக்கமும் ஊக்கமுமளித்து சுய நல மின்றிப் பல தொண்டுகள் புரிந்த அன்பர்களனைவரையும் பாராட்டுகிறோம். சிவாச்சாரியப் பெருமக்களை வாழ்த்துகிறோம். இவ்விழா ஒரு குறைவுமின்றி நிறைவுற உளமார ஆசீர்வதிக்கின்றோம். ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

— ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள்



## மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

சகல மங்களங்களும் பொலியும் இலங்கையின் வடபால் நாரந்தனை - சரவணை கர்ணன் தோட்டம் என்னும் திருப்பதியின் கண் எழுந்தருளி, வேண்டுவோருக்கு வேண்டிய அருளினை தீர்த்து வாழ்வளிக்கும் கலியுக வரதனாகிய ஸ்ரீ மகாவல்லி தேவசேனசமேத ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமிக்கும் சண்முகர், பைரவர் முதலான பரிவாரங்களுக்கும் உற்சவ மூர்த்திகளுக்கும் ருதிரோத்காரி வருடம் தை 23 திங்கள் கிழமையாகிய (6-2-84) சதுர்த்தியும், சித்த யோகமும் உத்தரட்டாதி நட்சத்திரமும் சோமவாரமும் கூடிய இன்று காலை 9-30 மணிக்கும் 10-30 மணிக்கு மிடையில் வரும் மீனலக்கின சுப முகூர்த்தத்தில் எம்பெருமானுக்கு மஹாகும்பாபிஷேகம் மிகவும் சிறப்பாக நடைபெற திருவருள் கூடப்பெற்றுள்ளது. இக்கும்பாபிஷேக விழா இனிதே நடைபெற ஆலயபரிபாலன சபை சகல ஒழுங்குகளும் மேற்கொண்டுள்ளது.

கடந்த 26-4-83 சித்திரா பௌர்ணமி தினத்தன்று கோவில் மண்டபத்தில் நடைபெற்ற மகாசபையின் தீர்மானத்தின்படியும் காலத்திற்குக் காலம் பரிபாலனசபையினால் தீர்மானிக்கப்பட்ட தீர்மானங்களின் படியும் கும்பாபிஷேக விழாவினை நிறைவேற்றுவதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது.

### நிதிசேகரிப்பு

வருடாந்த திருவிழா உபயகாரரிடமிருந்தும் விஷேட திருவிழ உபயகாரரிடமிருந்தும் நாரந்தனை - சரவணைப் பொது மக்களிடமிருந்தும், இவ்விரு கிராமங்களைச் சேர்ந்த வெளி நாட்டில் வதியும் அன்பர்களிடமிருந்தும் நிதி சேகரிக்கப்பட்டது.

### ஆலயத்தின் தூபிகள் மண்டபங்கள் புனருத்தாரனம்

கோவிலின் சகல தூபிகள் மணிக்கூட்டுக் கோபுரம், வசந்த மண்டபம் ஏனைய முன் மண்டபங்கள், மூலஸ்தானம் முதலியவற்றிற்கு வேண்டிய திருத்த வேலைகளும் ஓவியப் பெயின்ற் வேலைகளும் வர்ண வேலைகளும் யாழ்ப்பாணம் செட்டித்தெருவைச் சேர்ந்த பிரபல ஓவியரும், சிற்பக்கலைஞருமான திரு பீ. எஸ். மணியம் அவர்களினால் ஒப்பந்த அடிப்படையில் ரூபா 75,000/-திற்கு மேலான செலவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. தற்போது மேற்படி ஆலயம் புது மெருகுடன் காட்சியளிப்பதை யாவரும் அறிவீர்கள்.

### கோவிலின் வடக்குவீதி கொட்டகையின் கோப்பிச வேலைகள்

இவ்வேலை நீண்டகாலமாகப் பூர்த்திசெய்யப்படாத நிலையிலிருந்து வந்தது. இவ்வேலையை சிவபுண்ணிய சீலர்களாகிய திருவாளர்கள் ஆ. குணநாயகம், த. ஸ்ரீபாலன், சி சரவணை

(8-ம் பக்கம் பார்க்க)

### க. நடராசா

(தலைவர், ஆலய பரிபாலன சபை)

மகாகும்பாபிஷேகம் இனிதே நடைபெற பிரதிஷ்டா சிரோன்மணி, சிவானுபூதி சிவாசிய சக்கரவர்த்தி சிவ ஸ்ரீ சுவாமி விசுவநாதக்குருக்கள் அவர்களினால் அருளாஞ்ஞை வழங்கப்பெற்று முத்தமிழ் குருமணி கிரியாக்கிரம ஜோதி சிவ ஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள் சர்வ போதகராகவும், சிவ ஸ்ரீ வெங்கடசுப்பிரமணியக்குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருக்களாகவும் இருந்து சிறப்புற நடாத்தி வைக்கப்படும். இதற்கு நாரந்தனை - சரவணையைச் சேர்ந்த பொதுமக்களும், சரவணை - நாரந்தனையைச்சேர்ந்த வெளியிடங்களில் வதியும் அன்பர்களினதும் மனப்பூர்வமான ஒத்துழைப்பின் காரணமாக கும்பாபிஷேக விழாவைச் சிறப்புற நிறைவேற்ற ஆலய பரிபாலன சபைக்கு பேருதவியாக அமைந்திருந்தமை மகிழ்ச்சிக்குரியதாகும்.

### நிர்வாகசபை

தலைவர்:- க. நடராசா. உபதலைவர்:- இ. நகுலேச பிள்ளை, காரியதரிசி: நா. தாமோதரம்பிள்ளை, உபகாரியதரிசி; க. பஞ்சலிங்கம் தனாதிகாரி! மா. தங்கலிங்க முதலியார், பஞ்சாய உறுப்பினர்; மு. பொ. நாகராசா. ச. மாணிக்கம். தி. இன்பலிங்கம். சி. சதாசிவம் க. சின்னத்துரை.

## கந்தன் கருணை

மனித வாழ்வு இன்பமுடையதாய் மட்டும் இருந்தால் போதியதாகாது அது மிக்க நல்ல பயனுடைய வாழ்வாகவும் இருத்தல் வேண்டும் இதுவே பூரணமான - நிறைந்த - வாழ்வு எனப்படும்.

வாழ்க்கை நிறைவை - பூரணமான வாழ்வை இலட்சியமாகக் கொண்டே சமய, தத்துவ ஞானிகள் பலரும் பல்லாண்டுக் காலமாகப் பல் கோணத்தில் நின்று வாழ்க்கை நெறிகளை மக்கட் சமுதாயத்திற்கு வகுத்துக் காட்டி வந்துள்ளனர். இந்த இலட்சியத்துக்குத் துணையாகவே இறை வணக்கமும், கோவில் வழிபாடும் சமுதாயத்தில் வற்புறுத்தப்பட்டு அநுபூதி நெறியாக வழங்கி வருகின்றது.

### பண்டிதர் க.இராசையா பி.ஏ.

யாழ்க் குடாநாட்டில் சைவமும், தமிழும் தழைத்தினிதோங்கும் பண்புசால் பிரதேசம் தீவுப்பகுதி. இங்கும் பழம் பெருமையும் அருட்கீர்த்தியும் வாய்ந்த கோவில்கள் பல உள்ளன. இலைடன் தீவின் - வேலணைத் தீவின் - மையமாக நாரந்தனை - சரவணை என்னும் கிராமங்களின் எல்லையில் உள்ளது கர்ணந் தோட்டத்துக்கந்தன் கோவில். சரவணப் பொய்கையில் உலகுய்ய உதித்த ஒரு திருமுருகன், கர்ணந் தோட்டத்து வள்ளி, தெய்வயானை சமேதராக, ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி என்னும் மூர்த்தி நாமம் கொண்டு இத்தலத்திலே கோயில்கொண்டிருக்கின்றான்.

இக்கோயிலில் நித்திய நைவேத்திய பூசைகளும், மகா உற்சவங்களும், விசேட விழாக்களும் நெடுங்காலமாக மிக ஒழுங்காக நடைபெற்றுவருகின்றன.

வைகாசி மாதப் பூரணைத் தினத்திலே கர்ணந் தோட்டக் கந்தன் தேர் வீதி வலம் வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். பக்தகோடிகள் நாலா பக்கமும் இருந்து திரண்டுவந்து கந்தன் கருணையில் மூழ்கித் திளைப்பர். பக்தி பரவசப்பட்டு 'கர்ணந் தோட்டத்துக் கந்தா, அப்பனே, முருகா, வேலவா...' என்றெழுப்பும் ஆனந்த முழக்

(8-ம் பக்கம் பார்க்க)

### பிரதம குருக்கள்ஆசி

இவ்விழாவை அடிப்படையாகக் கொண்டு வெளிவரும் இந்த கும்பாபிஷேக விழாச் சிறப்பு மலர் பக்த கோடிகளின் மனதில் இல்லங்களில் ஒளிவிடவும் நறுமணம் நிறைந்த வாடாத மலராகத் திகழவும் முருகன் பாதாரவிந்தங்களைத் தியானஞ் செய்து, இந்த மலரானது இந்துக்கள் இல்லத்தில் இடம்பெற வேண்டுமென பிரார்த்தனை செய்து ஆசி கூறுகிறேன்,

சிவஸ்ரீ சிவாச்சாரியமணி
க. சிவபாலக்குருக்கள்
(பிரதம குருக்கள்)

# இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய

# மகா கும்பாபிஷேகம்

## குடமுழுக்குப் பெருவிழா நலமுடன் நடக்கட்டும்

சைவ சமயம் காலத்தால் மிக முற்றியது என்பது வரலாற்றுச் சான்றுகளாலும், இலக்கியச் சான்றுகளாலும் உணர்த்தும் செய்தியாகும். மொகஞ்சோதாரா ஹரப்பா எனும் இடங்களில் கிடைத்த அகழ்வாய்வுக் குறிப்புகளும், இதிகாச காலத்தில் இராமன் இராமேஸ்வரத்தில் இலிங்க வழிபாடு செய்த செய்தியாலும் இலிங்க பூஜை மிகத் தொன்மைக்காலத்தே விளங்கியிருந்தது என்பது போதரும். இத்தகைய தமிழ்ச் சைவ நெறியைக் கண்ணெனப் போற்றிக் காத்துவரும் சிறப்பு யாழ்ப்பாணத்தில் வாழும் மக்களுக்கு என்றும் உண்டு. ஆறுமுகநாவலர் போன்ற சான்றோர்கள் தோன்றிய மண் அது அத்தகைய புண்ணிய மண்ணில் இன்றும் தமிழும், சைவமும் தழைத்தோங்கி வரும் பாங்கு பாராட்டற்குரியது.

திருக்கயிலாய பரம்பரைத்
தருமையாதீனம்
26-வது குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக
ஞானசம்பந்த
பரமாச்சாரிய சுவாமிகள்

இத்தகைய சிறப்புக்கள் பல பெற்ற யாழ்ப்பாணத்தில் இணுவில் என்னும் ஊரில் பழைய யாழ்ப்பாணத்து ஆரிய சக்கரவர்த்திகளில் ஒருவராகிய பரராசசேகர மன்னன் பெயரில் அமைந்த அருள்மிகு விநாயகப் பெருமான் திருக்கோயிலின் மகா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெறுவது மகிழ்ச்சிக்குரியது.

விநாயகப் பெருமான் பல பெயர்களில் வழிபடக் கூடியவர். தனக்கு ஓர் நாயகர் இல்லாதவர். ஆகலின் விநாயகர் என்றும், கணங்களின் பதி ஆதலின் கணபதி என்றும், யானை முகங்கொண்ட பெருமான் ஆதலின் ஆனைமுகன் என்றும், விக்கினங்களைத் தீர்க்கும் கடவுள் ஆதலின் விக்கினேஸ்வரன் என்றும் அன்பர்களால் பல பெயரிட்டு வழிபடும் காப்புக் கடவுள் அவர். இப்பெருமானுக்கு அமைந்துள்ள திருக்கோயிலைச் செப்பனிட்டு மகாகும்பாபிஷேகம் செய்வதால் இனி அப்பகுதிவாழ் மக்களுக்கு இப்பெருமானை முழுமையாக வழிபடும் வாய்ப்புப் புண்ணியவயத்தல் இப்பொழுது கிடைத்துள்ளது.

"விநாயகனே வெவ்
வினையை வேரறுக்க
வல்லான்
விநாயகனே வேட்கை தணி
விப்பான்-விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும்
நாதனுமாம்
தன்மையினால்
கண்ணிற்பணிமின்
கனிந்து"

என்னும் பாடலை உளங்கொண்டு அன்பர்கள் நாளும் வழிபட்டு வெவ்வினை தீர்த்து வேட்கை தணித்து நீடு வாழவும் குடமுழுக்குப் பெருவிழா நலமுடன் நிகழ்ந்தேறவும், விழாவை நிறைவேற்றும் புண்ணிய பணியில் பங்கு பற்றும் அன்பர்களும் பிறரும் நலம் பல பெற்று நீடு இனிது வாழவும் எல்லாம் வல்ல ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.



உ
இணுவில்,
அருள்மிகு
ஸ்ரீபரராஜசேகரப்
பிள்ளையார்
திருக்கோயில்
இருபத்தைந்து
குண்ட உத்தம
மஹாயாக
ஜீர்ணோத்தாரண
ஸ்வர்ணபந்தன
பிரதிஷ்டா
மகாகும்பாபிஷேகம்
இன்று திங்கட்கிழமை
6ம் திகதி காலை
7-29 மணிக்கு
நடைபெறுகிறது
அடியார்கள்
உரியகாலத்தில் வந்து
சுவாமி தரிசனம்
செய்து திருவருள்
பெற்றுய்ய
வேண்டுகின்றோம்.

- தேவஸ்தான
அடியார்கள்.

## விரைகழல் சரணே

### பண்டிதர் நா. இராசையா

ஓம் என்பது பிரணவமந்திரம். அவ்வோங்காரதாத சொரூபியாக விளங்குபவர் விநாயகப்பெருமான். அவரது ஆனைமுகத் தோற்றம் அப்பிரணவாட்சரத்தின் வடிவமாக அமைந்தது சிவகணங்கள் எல்லாவற்றிற்கும் அவரே தலைவர். அதனாலேயே அவர் கணபதி என்றழைக்கப்படுவர். தனக்கு மேல் ஒரு தலைவனில்லாது தாமே ஆன்மகோடிகட்கெல்லாம் தலைவனாக விளங்குதலின் விநாயகன் எனவும், தம்மை அலட்சியம் செய்வார்க்கு விக்கினங்களை ஏற்படுத்தி அவர்தம் அறியாமையை அகற்றி அருள்புரிந்தும், தமது அடியார்களின் விக்கினங்களை அகற்றி அவர்களைக் காத்து அருள் புரிந்தும் நிற்றலின் விக்கினேஸ்வரன் என்றும் பெயர் பெறுவர். தம்மை வழிபட்டோரது இன்னல்களைப் போக்கி அவர்களுக்கெல்லாம் அருள்புரிபவர் விநாயகப் பெருமான், முருகன், மால், அகத்தியர், இந்திரன் முதலாய கடவுளரும், தேவர்களும், முனிவர்களும் விநாயகப்பெருமானை வழிபட்டுத் தம் துயர் தீரப்பெற்றனர்.

முன்னொரு காலத்தில் தென்றிசை நோக்கிப் புறப்பட்ட அகத்தியர் விநாயகப் பெருமானை வழிபடவிழைந்தார். விநாயகப் பெருமான் ஒரு கற்பாறையிடத்தே தோன்றியருள அகத்தியர் அவரை வழிபட்டு எம் பெருமானே நீர் இவ்விடத்தே நிலைகொண்டிருக்கவேண்டுமென இரந்ததோடு அவ்விடத்தே தாம் ஒரு நகரத்தையுண்டாக்கி அந்நகர மக்களைக் காத்து அருள்புரியவேண்டுமென வேண்டினர். விநாயகப் பெருமானும் அவர்வேண்டியவாறே அருள்புரிந்தார். அகத்தியரால் நிறுவப்பட்ட அந்நகரமே பின்னர் "வாதாபி" எனப்பட்டது கி. பி. ஏழாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டை ஆண்ட நரேந்திர பல்லவனின் படைத்தளபதி பரஞ்சோதி (இவரே பின்னர் சிறுத்தொண்ட நாயனார் எனப்போற்றப்பட்டவர்) வாதாபி நகர் மீது படையெடுத்து அந்நகரை வெற்றிகொண்டு அங்கு அகத்தியரால் வழிபடப்பட்ட விநாயகர் சிலையை எடுத்து வந்து தமிழ்நாட்டில் கோவிலமைத்துப் பிரதிட்டை செய்தார். இவ்வரலாற்றைக் கொண்டே "வாதாபி ஹணதிபம்" என்ற ஹம்சத்துவனிராகக் கிருதியை அருளிச் செய்தார் தியாகப் பிரமம். அக்கிருதியில் வரும் "பிரணவ சொருப வக்ரதுண்டம்" என்ற தொடர் பிரணவ மந்திர சொரூபியே விநாயகப் பெருமான் என்ற உண்மையை உணர்த்தும் பரஞ்சோதியின் மூலம் விநாயகர் வழிபாடு தமிழ்நாடெல்லாம் பரவிற்று மக்கள் ஊரெல்லாம் வேழமுகத்தவனுக்கு கோவில் அமைத்து வழிபாடியற்றினர். அவ்வாறமைக்கப்பட்ட ஆலயங்களுள் ஒன்றே இணுவில் தெற்கு மடத்துவாசற் பிள்ளையார் கோவிலாகும். இங்கு எழுந்தருளியிருக்கும் வேழமுகத்தண்ணல் பாதமலர்களை சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த தமிழ் மன்னன் ஸ்ரீபரராசசேகரன் வழிபட்டு அவனருள் பெற்றுத் தான் தொடங்கிய வினைமுடித்து மகிழ்ந்தான் பரராசசேகரன் வழிபட்ட காரணத்தால் இக்கோவில் பரராசசேகரப்பிள்ளையார் கோவில் என்னும் பெயர் பெற்றது.

விநாயகப் பெருமான் தம் திருவடிகளைச் சரணென நாடி வந்தோர் தம்மிடர் தீர்த்து, அவர் வேண்டுவ வருவிக் காப்பவர். அவரைஒளவைமூதாட்டி சரணடைந்து அவரது திருவடிகளை 'சீதக் களபச்' செந்தாமரைப் பூம்பாதம்" எனச் சிறப்பித்து அகவல் பாடி இறுதியில் "வித்தக விநாயக விரைகழல் சரணே" என அவர் திருவடிகளே தஞ்சம் என்

(8-ம் பக்கம் பார்க்க)

மகாகும்பாபிஷேகம்
சிறப்புற வாழ்த்துக்கள்

சிமாட்டி

158, நவீனசந்தை
யாழ்ப்பாணம்
ஹலோ: 24096

# மவுண்ட்பேட்டன் படுகொலைக்கு

# அமெரிக்க சி. ஐ. ஏ. காரணம்?

## பிரிட்டிஷ் எம். பி. யின் அதிர்ச்சி தரும் தகவல்

லண்டன், பெப். 5

பிரிட்டிஷ் அரச குடும்பத்தைச் சேர்ந்தவரும் பிரிட்டனின் பிரபல ராணுவ முக்கியஸ்தருமான மவுண்ட் பேட்டன்பிரபுவின் படுகொலைக்கு சி. ஐ. ஏ. காரணமாகும் என்று பிரிட்டனின் அரசியல் கட்சிப் பிரமுகர் ஒருவர் கூறியுள்ளார்.

நாலரை வருடங்களுக்கு முன்னர் மவுண்ட்பேட்டன் பிரபு படுகொலை செய்யப்பட்டது தெரிந்ததே. ஐரிஷ் விடுதலை வீரர்களாலேயே இவர் படுகொலை செய்யப்பட்டார் என்று அப்போது கூறப்பட்டது. ஐரிஷ் குடியரசு ராணுவத்தின் மீதும் பிரிட்டிஷ் அரசாங்கம் குற்றம்சாட்டியது.

இன்று பிரிட்டனில் அல்ஸ்டராக முன்வந்துள்ள ஐக்கியடரின் நலன்களைப் பேணுவதற் அல்ஸ்டர் யூனியன் கட்சியின் எம்பியான எனோச் பவல், அமெரிக்காவின் உளவு சேவையான சி. ஐ. ஏ. நிறுவனமே மவுண்ட்பேட்டனின் படுகொலைக்குக் காரணம் என்று குற்றம் சுமத்தியுள்ளார்.

அதிதீவிர வலதுசாரிக் கருத்துக்களைக் கொண்ட அரசியல்வாதியான எனோச் பவல் இப்படிப்பட்ட திடுக்கிடும் கருத்துக்களை வெளியிடுவதில் வல்லவர் பெரும்பாலும் இவர் வெளியிடும் கருத்துக்கள் நெஞ்சைத் தொடுவனவாய் இருப்பதுடன் பிரிட்டிஷ் பத்திரிகைகளில் அதிபிரதான இடத்தையும் பிடித்துவிடுகின்றன.

அல்ஸ்டரையும் அயர்லாந்தையும் இணைப்பதில் அமெரிக்கா அக்கறை காட்டுகிறது. இவற்றை இணைப்பதன் மூலம் அயர்லாந்தை நேட்டோவுக்குள் இழுத்துவிடமுடியும். நேட்டோவில் அயர்லாந்து சேர்வது, தமக்குப்பெரும் அனுகூலமானது என்று 'பென்ரகன்' ஜெனரல்கள் நம்புகிறார்கள்'' என்று கூறுகிறார் எனோச் பவல்.

அணுவாயுதம் பரிகரணத்துக்கான இயக்கத்தின் தீவிர உறுப்பினரான டேவிட் கோட்ஸுக்கு எனோச் பவல் எழுதிய கடிதம் ஒன்று காரிடியனில் வெளியாகியுள்ளது. டேவிட் கோட்ஸும்கூட, மவுண்ட்பேட்டனின் படுகொலை, அமெரிக்காவின் அணுவாயுத அபிலாஷைகளுடன் சம்பந்தப்பட்டுள்ளது என்று நம்புகிறார். ஆனால் அவர் கூறும் காரணங்கள் வேறானவை.

மவுண்ட்பேட்டன் பிரபு தாம் படுகொலை செய்யப்படுவதற்கு நாற்பத்தேழு நாட்களுக்குமுன்னர்ஸ்டாக்ஸ்போர்க் என்ற பிரெஞ்சு நகரில் உரை ஒன்றை ஆற்றினார். அணுவாயுத யுத்தம் ஒன்று ஏற்படுமானால் அதிலிருந்து தப்புவார் எவருமில்லை. அனைத்துமே அழிந்து போய்விடும் என்று அவர் அங்குதெரிவித்துள்ளார். ஐம்பது ஆண்டுகளை ராணுவத்துறையில் செலவழித்துள்ள அவர் தொடர்ந்து கூறுகையில் ''அணுவாயுதப் போட்டிக்கு எந்தவித மெய்யான அரசியல் காரணமும் இருப்பதாக எனக்குத்தெரியவில்லை. அணுவாயுதங்களைக்கொண்டு யுத்தத்தை நடாத்தமுடியாது'' என்றும் தெரிவித்துள்ளார்.

ஐம்பதாம் ஆண்டுகளின் மத்தியில் பிரிட்டனின் அணுவாயுத நீர்மூழ்கிகளில் அணுவாயுதங்கள் வைக்கப்படும் கருத்தை ஆதரித்த மவுண்ட்பேட்டன் பிரபு எழுபதாம் ஆண்டுகளின் பிற்பகுதியில் அணுவாயுதங்கள் குறித்த தமது கருத்தை மாற்றிக் கொண்டார். அவரது கடைசிக் காலத்தில் பிரிட்டனிலும் வெளிநாடுகளிலும் அவருடைய மதிப்பு வெகுவாக உயர்ந்திருந்தது.

அணுவாயுத யுத்தம் குறித்த அவரது எச்சரிக்கைகளே அவரைப் பலியெடுத்தனவா? சி. ஐ. ஏ. இவரது படுகொலைக்குப் பின்னால் உள்ளதா? அல்ஸ்டர் அயர்லாந்து விவகாரங்களில் அமெரிக்கா அளவுக்கு மீறிக் காட்டும் அக்கறை குறித்த எனோச் பவல் கிளப்பியுள்ள சந்தேகங்களை பிரிட்டனில் எவரும் நிராகரிக்கவில்லை என்றும் கூறப்படுகிறது. (கி)

G.C.E. (O/L) DEC. 84
& GRADE 9

அடிப்படைக் கல்வியை ஸ்திரப்படுத்தும் நோக்குடன்
Maths, Science, English
வகுப்புகள்
10-02-84 ல் ஆரம்பமாகின்றன.
திறமையும் அனுபவமும் மிக்க ஆசிரியர்களிடம்
கற்றுத் திறமைச் சித்திபெய்த
நல்லதோர் சந்தர்ப்பம்

முக்கிய குறிப்பு :- மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தனிக் கவனம் செலுத்துவதற்கு வசதியாக ஒவ்வொரு வகுப்பிலும் குறிப்பிட்ட தொகையினர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

மேலதிக விபரங்களுக்கு:-
CANTABIA INSTITUTE
21, MAIN STREET, JAFFNA.
T'PHONE : 24201

ஹோம் பிறுன்ஸ் லிமிட்.
உல்லாச பஸ் சேவை

தினசரி மாலை 7-45
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 7-45
யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு

கண்ணியமான - பாதுகாப்பான பஸ் சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

1. ஹோம் பிறுன்ஸ் லிமிட்.
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 24810
2. நியூ ப்ரசீதா
இல: 337, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 22480
3. யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22537, 22370
4. நியூ லங்கா அலுமீனியம் இன்டஸ்றீஸ் விற்பனவு நிலையம்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 23596

கொழும்பில் டிக்கட் பெறுமிடங்கள்

1. ஹோம் பிறுன்ஸ் லிமிட்.
463, காலி வீதி,
கொழும்பு-6
தொலைபேசி: 589190—587680

2. ஸ்ரீ மணிமலர் ஸ்டோர்ஸ்
157/2, ஸ்ரீ கதிரேசன் வீதி,
கொழும்பு-11.
தொலைபேசி: 25277

## லெபனானில் பிரதமரும், ஐந்து அமைச்சரவை

# உறுப்பினர்களும் ராஜினாமா!

பெய்ரூட், பெப் 5

லெபனான் பிரதமந்திரி நேற்றுத் தமது பதவியை இராஜினாமாச் செய்தார். இவரின் ராஜினாமாவை ஜனாதிபதி அமின் ஜமாயல் ஏற்றுக்கொண்டார். இவருடன் வேறு ஐந்து லெபனான் அமைச்சரவை உறுப்பினர்களும் தமது பதவிகளை இராஜினாமாச் செய்தனர்.

இராஜினாமாச்செய்த லெபனான் பிரதமர் கடந்த பதினைந்து மாதங்களாக இப்பதவியை வகித்து வந்தார். முஸ்லிம்கள் லெபனான் அமைச்சரவையில் அங்கம் பெறக்கூடாதென தீவிரவாத முஸ்லிம்கள் கேட்டுக்கொண்டதையடுத்தே முஸ்லிம் இனத்தவரான லெபனான் பிரதமர் தமது பதவியை இராஜினாமாச் செய்தார்.

லெபனான் ஜனாதிபதி திரு. அமின் ஜமாயல் இந்த இராஜினாமாவை ஏற்றுக்கொண்டார், இது குறித்து அவர் எதுவித அபிப்பிராயத்தையும் வெளியிடவில்லை. திரு. அமின் ஜமாயல் ஒரு கிறிஸ்தவ இனத்தவரென்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை லெபனானில் போர் நிறுத்தங்களை ஏற்படுத்தும் முயற்சிகளில் பல்வேறு இயக்கங்களும் இறங்கியுள்ளன, நேற்று முன்தினம் நிகழ்ந்த குண்டு வெடிப்பொன்றில் 80 பேர் கொல்லப்பட்டனரென்றும் பலர் காயமடைந்தனரென்றும் தெரிவிக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க இஸ்ரேலில் சுமார் இருபதினாயிரம் இஸ்ரேலியர்கள் லெபனானிலிருந்து இஸ்ரேலியத் துருப்புக்களை இஸ்ரேலியத் துருப்புகளை வாபஸ் பெறும்படி கோரி ஆர்ப்பாட்டம் நிகழ்த்தினர்.

இவர்கள் போர்ச்செலவுகள் வீணே விரயமாவதையும் உயிர்ச் சேதங்கள் அதிகரித்துச் செல்வதையும் தமது ஆர்ப்பாட்டங்களின்போது சுட்டிக்காட்டினர். (கி)

## இன்றைய பலன்

தை மாதம் 23ம் திகதி
6—2—84
திங்கட்கிழமை

**மேடம்:** கன்னல் மொழி பேசிக் காரியத்தைச் சாதிப்பீர்கள், வெளியூர்ச் செய்தியொன்று மகிழ்ச்சிதரும், குடும்பத்திலும் குதூகலம் தென்படும்.

**இடபம்:** எதிலும் அவசரம், கோபம் தென்படும், சகோதர வழிச் சஞ்சலம் ஏற்படும், தற்பெருமையைத் தவிர்த்துக் கொள்ளவும்.

**மிதுனம்:** பந்தபாசம் உங்களைப் பரவசப்படுத்தும், உறவினர் சகாயம், கல்வித் துறையில் அதிக ஈடுபாடு ஏற்படும்.

**கடகம்:** இனிமை பயக்கும் நாள், அன்பர்கள் ஆதரவு கிடைக்கும், பொதுமக்கள் மத்தியில் மதிப்பு உயரும், உற்சாகம் பிறக்கும்.

**சிங்கம்:** சூழ்ச்சி வலை விரிக்கும், வழக்கு விவகாரம் ஏற்படலாம், வீண்செலவு உண்டு, தெய்வ நம்பிக்கை நன்று.

**கன்னி:** கட்டி வெல்லம் போல் இனிக்கும் வாழ்க்கை, பசுமையான எண்ணங்கள் மனதில் தோன்றும், களஸ்திர மித்திரன வரவுக்கு இடம் உண்டாம்.

**துலாம்:** கடன் தொல்லை அதிகரிக்கும், குடும்பப் பிளவுகள் ஏற்படும், மனத் தளர்ச்சி ஏற்படும், நிதானம் வேண்டும்.

**விருச்சிகம்:** புண்ணிய யாத்திரையொன்று மேற்கொள்ளப்படலாம், பெரியோர் ஆதரவு கட்டாயம் கிடைக்கும், பிதாவழிப் பெருமையும் உண்டு.

**தனுசு:** உண்மை வழிநின்று உயர்வடைவீர்கள், தொழிலில் லாபம் கிட்டும், நிலை மாற்றமும் ஏற்படலாம், வாழ்க்கையும் மலரும்.

**மகரம்:** செல்வாக்குப் பெருகும், வரவில் உயர்வு தென்படும், பிறபொருள் வரவு உண்டு, தெய்வ அருளும் உண்டு.

**கும்பம்:** உறவுகளில் பிளவு தென்படும், தொழில் துறையில் மந்தநிலை ஏற்படும், வீண் பழிக்கும் ஆளாவீர்கள் கவனம் செலுத்தவும்.

**மீனம்:** கொடுக்கல் வாங்கல் பிணக்கு உருவாகும், உதவி செய்யப்போய்ப் பகையைச் சம்பாதிப்பீர்கள், அரச பயமும் உண்டாம்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை
புத்திரன் வே. குவேந்திரன்

## மூன்று கம்யூனிஸ்டுகளுக்கு தூக்குத்தண்டனை

தெஹரான், பெப். 5

மூன்று முக்கிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் ஈரானில் தூக்கிலிடப்பட்டனர்.

இவர்கள் மூவரும் ஈரானியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மரண தண்டனைகளை, ஈரானிய புரட்சி நீதிமன்றம் விதித்ததைத் தொடர்ந்து சுப்றீம் நீதிச்சபை ஊர்ஜிதம் செய்தது.

அரசவிரோத நடவடிக்கைகளில் இம் மூன்று கம்யூனிஸ்ட்டுகளும் இறங்கியிருந்தார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. (கி)

## உணவுப் பண்டங்கள் விலை அதிகரிப்பு

[சுண்டிக்குளி]

மா விலை அதிகரிப்பைத் தொடர்ந்து யாழ் நகரிலுள்ள உணவுக்கடைகளில் உணவுப் பண்டங்களின் விலையும் அதிகரித்துள்ளது.

இடியப்பம், தோசை முதலிய உணவுகள் மட்டுமன்றி சில கடைகளில் மா சேர்க்கப்படாத உணவுகளும் விலைகூட்டியே விற்கப்படுகின்றனவாம். மதிய உணவு [சோறு] பத்து ரூபாவாக அதிகரித்துள்ளது.

3- 9-2-84 வரை
**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 2-30 6-00
எம். ஜி. ஆர். -ஜெயலலிதா
**நீரும் நெருப்பும்**
(புதிய பிரதி-கலர்)

7 "சூப்பர் ஹிட்" பாடல்களுடன் மக்களைப் மனங்கவர்ந்த வண்ண காதலோவியம்.
**றீகல்** (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
மோகன்... பூர்ணிமா
**பயணங்கள் முடிவதில்லை**

6-2-84
**ராஜா** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
சிவாஜி - சரோஜாதேவி
**ஆலயமணி**
(புதிய பிரதி)

10-2 84 முதல்
கமல் — ஸ்ரீதேவி
இந்தியாவில் முதல்முறை திரையிடப்பட்டு தடைசெய்யப்பட்டு மீண்டும் திரையிட்ட பொழுது மாபெரும் வெற்றியீட்டிய
**மீண்டும் கோகிலா**
இளசுகளின் இன்பக் காவியம்

இன்று மட்டும்
**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-30, 4-45 ,7-00
Kurt Russel
**USED CARS**
(Sex - Comedy - Color)
திரைவானில் அதிசயிக்க வைக்கும் கார் ஓட்டங்கள் பரபரப்பூட்டும் சண்டைகள் களிப்பூட்டும் நகைச்சுவை இன்னும் எத்தனையோ-முன்னர் திரையிட்ட சமயம் பார்த்தவர்களே மிக ஆவலுடன் பார்க்கின்றார்கள் - பார்க்காதவர்களுக்கு அரிய வாய்ப்பு

**லிடோ** [யாழ்நகர்]
தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர்.—லதா
**நீதிக்கு தலைவணங்கு**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, 9-00
முத்துராமன் - கவிதா தேங்காய்சீனிவாசன்
**காற்றினிலே வரும் கீதம்**
(ஈஸ்மன் கலர்)
பஸ்சேவை இரவு 9-00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மாலைக்காட்சி 6-00 மணிக்கு ஆரம்பமாகும்.

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30 6-30,
எம். ஜி. ஆர்.—ஜெயலலிதா
**அன்னமிட்ட கை**

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி ஆர் —லதா
**சிரித்து வாழவேண்டும்**
(கலர் - புதிய பிரதி)

**வின்ஸர்** (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
54-வது நாளாக
சிவகுமார் - ராதா
சிவச்சந்திரன் - அருணா
நடித்த
**ஆனந்தராகம்**

**ஹரன்** (யாழ். நகர்)
பஸ்சேவை இரவு 9 மணி வரை நீடிக்கப்பட்டதைத் தொடர்ந்து மாலைக் காட்சி 6 மணிக்கு ஆரம்பமாகும். அழகிய மலேயா நாட்டின் இயற்கைப் பின்னணியில் ''வேண்டும் வேண்டும் உங்கள் உறவு' என்று கானமிசைத்த இளங்காதலரின் கதை சிவாஜி, ஸ்ரீப்பிரியா, நடித்த
**வசந்தத்தில் ஓர் நாள்**
(ஈஸ்மன் கலர்)


# ஆசிரியர் நமசிவாயம்

சைவாசாரத்திலும் அறிவு ஒழுக்கங்களிலும் ஏற்றம் மிக்க வேதாரண்யாதீனக் கருணைவாய்த் தேசிகரை ஆசாரியராகவும், நாவலர் பெருமான் மாணவரை ஆசிரியராகவும் உச்சிமேற்கொண்டு, மிக்குத் தோன்றும் ஊர் வேலணை மேற்கூர். இவ்வூரில் உளம் நிறை குருபக்தியில் பரைறிய முன்னின்றவர் ஆசிரியர் நமசிவாயம்.

இவருக்குத் தொழில் படிப்பித்தல். வாழ்க்கை வருவாய்க்குரிய தனித்தொழில் இது. அப்படியாகவும், படிப்பித்தலுக்குரிய முழுப் பொழுதும் இவருக்கு அதிற் செலவாவுவதில்லை. அவ்வாறுதற்கு இவரையே நோக்கி - வேண்டி நிற்கும் வித்தியாலயப் பிற பணிகள் அனுமதிப்பதில்லை. வித்தியாலயத்திற்கு ஆம் பணிகளுள், படிப்பித்தல் ஒழிந்த ஏனைய - மாணவரொழுங்கு, பெற்றார் நிறை குறை, பாடசாலைச் செம்மை, பாதுகாப்பு, தீட்சை, பூசை, விழா, கூட்டம் என்றின்ன - எல்லாம் இயங்க உயிர்ப்பாய் உதாவா நின்றவர் இவரே. இந்நிலையை ஊன்றி உணராதார்க்கு இவர்

(8-ம் பக்கம் பார்க்க)


**மனோகரா** (யாழ். நகர்)
10-30, 2-15. 4-45, and 7-00 P M.
**CAPTAIN AMERICA**
STARRING
Christopher Lee.
Reb, Brown,
Lanawood
Action Packed Thrill
Color

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
**பட்டமளிப்பு விழா**
1982 - ம் ஆண்டுப் பட்டதாரிகளுக்குப் பட்டம் வழங்குவதற்கான பட்டமளிப்பு விழா யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக் கைலாசபதி கலையரங்கத்தில் 1984 பெப்ரவரி 11 பி. ப. 4 மணிக்கு நடைபெறும்.
பதிவாளர்
யாழ்ப்பாணம்,
1984 - 2 - 4. 630

**தேவை**
**பெண் கணக்காளர்**
சர்வோதய யாழ். மாவட்ட நிலையம்
சர்வோதய யாழ். மாவட்ட நிலையத்திற்கு பெண் பிரதம கணக்காளர் ஒருவர் தேவை. கணக்காளருக்குரிய கல்வித் தகைமையுடையோரும் கணக்கு வைப்பதில் அனுபவமுடையோருமான 35 வயதிற்குட்பட்ட பெண்கள் விண்ணப்பிக்கலாம்.
15 - 02 - 84 க்கு முன் அமைப்பாளர், சர்வோதய யாழ். மாவட்ட நிலையம், புங்குடுதீவு என்னும் விலாசத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.
தகுதியான வேதனமும் தங்குமிடம் உணவு வசதிகளும் அளிக்கப்படும். 629

**பயிற்சிகள்**
● ரெலிவிஷன் ● வீடியோ டெக் றிப்பியறிங்
● எயர் கொண்டிசனிங் ● எலெக்ரிக்கல் வயறிங்
● வெல்டிங் ● HOTEL MANAGEMENT ● FRENCH
வெளிநாடுகளிலும் உள்நாடுகளிலும் வேலைசெய்வதற்கேற்றமுறையில் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
ஆரம்பம் 09-02-84
**THE SCHOOL OF COMPUTER STUDIES**
5 2/1, கனகரத்தினம் கட்டிடம் (றெயில்வே கடவை அருகாமை)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**இரத்தினம் தனியார் மருத்துவமனை**
(RATNAM PRIVATE NURSING HOME)
நெல்லியடி – கரவெட்டி
நோயாளரின் நலன்கருதி இரவு பகல் 24 மணி நேர சேவை ஏற்படுத்தப்பட்டுள்ளது.
புதன்கிழமைகளில் பிற்பகல் பெண்வைத்திய நிபுணரின் ஆலோசனையும் பெற்றுக்கொள்ளலாம்.
நிர்வாகி
627

**தேவை**
சோடாப்பெட்டி ஏற்றி இறக்கி வேலை செய்யக்கூடிய கூலியாட்களும் லொறி கிளீனரும் தேவை
மற்றும் டீசல் வாகனம் வேலை செய்யக்கூடிய 5 வருடத்திற்கு மேல் நன்கு அனுபவம் உள்ள மெக்கானிக்குகளும் தேவை.
திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.
நேரில் வரவும்.
உரிமையாளர்,
**பிள்ளையார் ஸ்ரோஸ்,**
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (590)

**காணி தேவை**
கீழ்க்காணப்படும் இடங்களில் பிரதான வீதிக்கருகாமையில் 30 பரப்பிற்கு மேற்பட்ட காணித்துண்டுகள் விற்பனைக்கிருந்தால் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

| | | | |
|---|---|---|---|
| 1, | கண்டி வீதி | — | பளை வரை |
| 2. | K. K. S. வீதி | — | தெல்லிப்பழை வரை |
| 3. | பலாலி வீதி | — | வசாவிளான் வரை |
| 4. | பருத்தித்துறை வீதி | — | அச்சுவேலி வரை |
| 5. | மானிப்பாய் வீதி | — | பண்டத்தரிப்பு வரை |

TFC
**த பினுன்ஸ் கம்பனி லிமிட்டட்,**
249, மின்சாரநிலையவீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 23680

முதன் முறையாக — யாழ்நகரில்
DIPLOMA IN
**HOTEL MANAGEMENT**
பயிற்சிக்காலம் 5 மாதம்
வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் உடனடி வேலைவாய்ப்புக்கள்
விரிவுரையாளர்: திரு. V. Nithianananda
DIP. IN HOTEL MANAGEMENT (LONDON)
பாடநெறி:- FRONT OFFICE, RECEPTION BAR
STORE KEEPING, ACCOUNTS
HOUSE KEEPING, COOKERY
✱ நிறுவனத்திலும் ஏனைய ஹோட்டல்களிலும் செய்முறைப்பயிற்சி (Practical) அளிக்கப்படும்.
✱ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்.
கட்டணம் ரூபா 1500/-
(3 தவணைகளில் செலுத்தலாம்)
ஆரம்பம்: 16—2—84
விபரங்களுக்கு:- நேரில் / தபாலில்
**ASTAN INSTITUTE**
166/1, HOSPITAL ROAD,
JAFFNA.

## வீட்டில் தனியே இருந்த

# மூன்று வயதுக் குழந்தை தீக்குப் பலி!

(யாழ்ப்பாணம்)

தாயார் மண்ணெண்ணெ வாங்குவதற்கு மூன்றுவயதுக் குழந்தையை வீட்டிலிருக்க விட்டுச்சென்றபோது அக்குழந்தை தீக்குப்பலியானது,

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தங்கராசா பேபி என்ற 3 வயதுக்குழந்தையே தீக்குப்பலியானது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினார்.

தாயார் கடையால் வீடு திரும்பிவரும்போது எரிந்து கொண்ட நிலையில் குழந்தை குளறிக்கொண்டு ஓடிவந்ததாகவும், பின் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்குமரணமானதாகவும் விசாரணையில் கூறப்பட்டது, விபத்துமரணம் எனத்தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

## கந்தன்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கம் அண்டமெலாம் அதிர வைக்கும்; நினைக்கும்போதெல்லாம் மெய் சிலிர்க்கவைக்கும்.

இத்தலத்திலே கந்தசஷ்டி விழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றது கந்த புராணப் படிப்பினை கேட்டுச் சுவைக்கவும் பயன் பெற்றுய்யவும் பக்தர்கூட்டம் எங்கெங்கிருந்தெல்லாமோ வந்து கூடும் ஆன்றபுலமையும் சித்தாந்த மெய்ஞ்ஞானமும் நிறைந்த சைவப் பெரியார்கள் பலரை ஒருங்கேகண்டு புராணப் படிப்பையும் பயனையும் கேட்டுச் சுவைக்கும் அரியதொரு சந்தர்ப்பம் இது. காலப்போக்கு இதிலும் தனது தாக்கத்தைக் காட்டிக் கொண்டே வருகின்றது. என்றாலும் சூரன்போரென்றால் கண்ணந் தோட்டத்துக் கந்தசுவாமி கோவிற்சூரன் போர்தான் பார்க்க வேணும்' என்று கூவல் செரட்டைச் சொட்ட மக்கள் பேசி மகிழும் பேச்சு இந்த ஸ்தலப் பெருமையை நிலைநாட்டிக் கொண்டே இருக்கின்றது; இருக்கும்

கந்தன் கருணையால் களிகொண்டு வாழும் மக்கள் கந்தன் கோயிலும் பரிபாலனமும் சிறக்க காணி நிலம் பணம் முதலாம் நன்கொடைகளைக் காலத்துக்குக்காலம் மனமுவந்து கொடுத்துதவுவதால் இக்கோயில் பல்வகைச் சிறப்புகளும் பெற்று வளர்ச்சி பெற்று வருகின்றது.

தனி ஒருவர் நிர்வாகமுறை காலப்போக்கில் மாற்றியமைக்கப்பட்டு நாரந்தனை — சரவணை ஸ்ரீ சிவசுப்பிரமணிய கோயில் பரிபாலன சபை என்னும் பொது மக்கள் நிர்வாகத்தின் கீழ் பல ஆண்டுகளாக இக்கோவில் வளர்ச்சி பெற்று வருகின்றது.

வேலணைத் தீவில் கந்தன் கருணை வீறு பெற்றோங்கும் புகழ் மிக்க இந்த ஆலயம் காலத்துக்குக்காலம் புனருத்தாரண வேலைகள் நிறை வேற்றப்படும் புதுமை பெற்றுக் கொண்டேயிருக்கின்றது. இப்பொழுதும் திருவருள் துணை நிற்க அடியார்களது பெரு முயற்சியால் புனருத்தாரண வேலைகள் சில நிறைவேறி மகாகும்பாபிடேகம் 6 - 2 -84 திங்கள் நிகழ்கின்றது. மகா கும்பாபிடேகம் மகிழ்வுடன் நிறைவெய்துக கந்தன் கருணை உலகெலாம் சிறக்கவே.

---

## மரண அறிவித்தல்

### சுவாமிநாதபிள்ளை செல்லையா

### (கனகரட்ணம்)

மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தருமான (Govt. Audit Officer, Audit Dept.) சுவாமிநாதபிள்ளை செல்லையா காலமாகிவிட்டார். இவர் திருமதி தனலட்சுமியின் (தனு) அன்புக் கணவரும், நாகேந்திரன் (லண்டன்), சாந்தி, ஜயந்தி, பாலேந்திரன் (ஜெனரல் மோட்டோர்ஸ், கொழும்பு-6), தயந்தி, உஷாந்தி (ஹட்டன் நஷனல் வங்கி, டாலி ரோட்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சிறீபத்மநாதன் (லண்டன்) அவர்களின் மைத்துனரும், சிவநாதன் (Rubber Technologist), ராஜரூபேந்திரா (இலங்கை வங்கி, காங்கேசன்துறை), யோகேஸ்வரி (லண்டன்), சசிகலா ஆகியோரின் மாமனாரும், நிலானி, தக்ஷ்மி, நிரோஷன், நாடியா, சஜன் ஆகியோரின் பாட்டனுமாவார். மரணச் சடங்குகள் 08-02-84 புதன்கிழமை காலை 10-00 மணிக்கு லோட்டன் ரோட், மானிப்பாயிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

637

---

## மரண அறிவித்தல்

### அப்புக்குட்டி கந்தையா

(மலாயன் பென்சனியர்)

உரும்பிராயைச் சேர்ந்த அப்புக்குட்டி கந்தையா காலமானார் அன்னார் காலஞ்சென்ற தவமணியின் கணவரும், சிவசுப்பிரமணியம் (மலேசியா), காலஞ்சென்ற குணரத்தினம் (மலேசியா), காலஞ்சென்ற காலகண்டன் (சிங்கப்பூர்), பத்மராணி, தேவராசா (அலக்சாண்ரு இண்டஸ்றீஸ், ஏழாலை), டாக்டர் பத்மநாதன் (லண்டன்), லோகேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சாவித்திரி, புவனராணி, ஜெயரட்ணம் (மண்டைதீவு) சந்திராதேவி ரூபி ஆகியோரின் மாமனாரும் ஆவார். சமக்கிரியை இன்று திங்கட்கிழமை (6-2-84) பகல் 11 மணியளவில் உரும்பிராய் மயானத்தில் நடைபெறும்.

"பத்மவாச"
கோப்பாய், உரும்பிராய்

636

## விரைகழல்...

5-ம் பக்கத் தொடர்ச்சி)

ரூர். விநாயகர் அவர்க்கு அருள் புரிந்து அவரைக் கைலை சேர்த்தார் விநாயகரது திருவடிகள் சரணடைந்தோரைக் காக்கும் திருவடிகள். அவற்றை நம்பியவர் பிறப்பறுத்தோராவர். இறைவனுடைய திருவடிகள் ஆன்மாக்களுக்கு அருள்புரிவன அவற்றை நாளும் நினைவார் தம் வினை நீங்கி வீடெய்துவர்.

பாவமும் பழியும் பற்றற
வேண்டுவீர்
ஆவிலஞ் சகத்தாடும் அரன்
கழல்
மேவராய் மிகவும் மகிழ்ந்
துள்குமின்
காவ லாளன் கலந்தருள்
செய்குமே.

என்றார் அப்பர். எல்லாவற்றிற்கும் தோற்றமாய் இறுதியாய் ஆதியாய் அந்தமாய் போகமாய் விளங்குவன இறைவன் திருவடிகள். அத்திருவடிகளை அடியார்கள் போற்றித் துதித்து அருள்பெற்றனர். "இனித்தமுடைய எடுத்த பொற்பாதம்" என்றார் அப்பர். "தானே வந்தெனைத் தலையளித்தாட் கொண்டருளும் வான்வார் கழல்" என்பர். மாணிக்கவாசகர். இத்துணைப் பெருமை வாய்ந்த இறைவன் திருவடிகளை நினையாது, மலபந்தத்தால் பிணிப்புண்டு பழிபாவங்கட்கு ஆளாகி வருகின்றோம். மனை யென்றும், மக்களென்றும், மாடென்றும், கன்றென்றும், நிலமென்றும், பொருளென்றும் ஆசைவயப்பட்டுக் கருத்தழிந்து கலங்குகின்றோம். அரிதிற் கிடைத்த மனிதப்பிறவியை வீணாக்கித் துன்பக் கடலில் கிடந்து தவிக்கின்றோம் அமைதியற்று அல்லல்பட்டழிகின்றோம் படித்தும் படியாத பாமரராய் அறிவிழந்து வெந்துயரில் வீழ்கின்றோம். இவ்வாறு துன்புறும் நம்மையெல்லாம் காத்து அருள்புரியவே ஆண்டவன் எங்கும் கோயில் கொண்டெழுந்தருளியுள்ளான், எனவேதான் 'திருக்கோவில் இல்லாத ஊர் காடு' என்றார் அப்பர். 'கோவில் இல்லாவூரில் குடியிருக்க வேண்டாம்' என்றார் ஔவை மூதாட்டி. எனவே நாம் ஆலயங்களிற்குச் சென்று ஆண்டவன் பாதகமலங்களைப்போற்றி வணங்குதல் வேண்டும்.

நிலைபெறுமா றெண்ணுதி
யேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம் பிரானு
டைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு
மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப்
புகழ்ந்து பாடி
தலையாரக் கும்பிட்டுக் கூத்து
மாடிச்
சங்கரா சயபோற்றி
போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடை
எம் ஆதீ யென்றும்
ஆரூரா வென்றென்றே
அலறு நில்லே

என்றார் அப்பர். மனம் அமைதிபெற இன்பம் நிலைத்திடத் துன்பம் அகன்றிடத் தும்பிக்கையான் பாத மலர் போற்றுதலே நங்கடனாகும். எனவே தஞ்சம் என்றடைந்தோர் தந்துயர் தீர்க்கும் வித்தக விநாயகன் விரை கழல் சரண்புகுந்திடுவோம்.

## ஆசிரியர்...

7ம் பக்கத் தொடர்ச்சி)

பணியின் தன்மை புலனாவதருமை.

இந்த ஆசிரிய சேவைக்கு. இவர் சமுதாய சேவை இம்மியளவுங் குறைவுடையதாகாது; தலைக்கண் நேர்நிற்குந் தரத்தது. இப்பகுதியினும் அப்பாலும் உள்ள பலநோக்குச் சங்கம், கலாசங்கம், சிறிய, பெரிய ஆசிரிய சங்கங்கள், வித்தியாவிருத்திச் சபை, பரிபாலன சபை என்றித்தொடக்கத்து மன்றங்கள் பலவற்றிலும் தொடர்பாகப் பல்லாண்டுக் காலம் அவை ஒளிபெற முன்னின்று நன்குழைத்து, ஒளி பரவப் பெற்றவர் இவர்.

— ஓர் அன்பர்.

## கிளிநொச்சி---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்று கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவிகள் தேசிய கீதம் சென் திரேசா கல்லூரி மாணவர்கள் பாண்ட் இசையைத்தொடர்ந்து தேசியக் கொடியை அரசாங்க அதிபர் ஏற்றிவைப்பார். அதனைத் தொடர்ந்து அரசாங்க அதிபர் கச்சேரியைத் திறந்துவைப்பார்.

### முதலாவது அரசாங்க அதிபர்

கிளிநொச்சி மாவட்டத்தின் முதலாவது அரசாங்க அதிபராக திரு என் ஜயகநாதன் பதவியேற்றுள்ளார் இலங்கை நிர்வாக சேவையிலுள்ள மூத்த நிர்வாகிகளில் இவர் ஒருவராவார். மன்னார் மாவட்டத்திலும், குருநாகல் மாவட்டத்திலும்இவர்அரசாங்க அதிபராகக் கடமையாற்றியுள்ளார். கிளிநொச்சியின் முதலாவது அரசாங்க அதிபராக கடமையேற்றுள்ள போதிலும், கிளிநொச்சிக்கு இவர் புதியவரல்லர்; ஏற்கனவே, இப்பிரதேசத்தின் மாவட்டக்காணி அதிகாரியாக கடமையாற்றியுள்ளார். (கு)

## இன்ரசிற்றி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிகிறது.

இதேவேளை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி அதிகாலை 5-45 மணிக்கு புறப்படும் ரயில் அனுராதபுரத்துடன் சேவையை நிறுத்திக் கொள்ளும். (சு)

## மேன்மைகொள்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பவான், து. பத்மநாதன், சு. பொன்னுத்துரை ஆகிய அன்பர்கள் மனமுவந்து அளித்த நன்கொடை நிதியின் மூலம் குறிப்பிட்ட வேலைகள் பூர்த்தியடைவதற்குரிய ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன

### முத்துக்குமாரசுவாமி விக்கிரகம்

ரூபா 17,500/- செலவில் தெய்வானை வள்ளி சமேதரரான ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தாம்பரவிக்கிரகம் ஒன்று சரவணையைச் சேர்ந்த சிவதர்மவள்ளல் திரு. மு. மாணிக்கவாசகர் அவர்களின் நன்கொடைப் பணத்தினால் யாழ்ப்பாணம், பிரவுன்வீதியைச் சேர்ந்த திரு. பாஸ்கரன் அவர்களால் சமைக்கப்பெற்று கோவிலுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட அவ்விக்கிரகத்திற்கும் இன்று அபிஷேகம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இன்றைய தினம் நடைபெறும் மகாகும்பாபிஷேக விழா சகல வழிகளிலும் சிறப்புடையதாக விளங்குகின்றது. ஆலயத்தின் பிரதமகுருக்கள் சிவஸ்ரீ கணேசராஜசிவாசாரியக் குருக்களின் பெருமுயற்சி இக் கும்பாபிஷேகம் செவ்வனே நடைபெற பேருதவியாக அமைந்துள்ளது.

கும்பாபிஷேக விழாவிற்கு முன்னராக தொடர்ச்சியாக 45 நாட்கள் மிகவும் ஒழுங்கான முறையில் யந்திரபூசை மேற்கொள்ளப்பட்டு வந்தமை ஒரு முக்கியமான தொன்றாகும். இதனைக்கண்டு வணங்கிய சரவணை-நாரந்தனை முருகன் அடியார்கள் பேருவகை கொண்டனர்.

கும்பாபிஷேக விழாவினைத் தொடர்ந்து முதல் 12 நாட்களுக்கு அலங்காரத் திருவிழாக்களும் அதனைத் தொடர்ந்து 32 நாட்கள் மண்டலாபிஷேகமும் கடைசி நாளான 45ம் நாள் சங்காபிஷேகமும் செய்யப்பட்டுள்ளது. எம்பெருமான் இக்கும்பாபிஷேக வைபவம் மிகவும் சிறப்புற நிகழ்ந்து பூர்த்தியடைய திருவருள் பாலிப்பாராக.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்".

## உருளைகிழங்கு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

உருளைக்கிழங்கு யாழ்ப்பாண விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது அவை சுமார் 753 ஹெக்டர் நிலத்தில் பயிரிடப்பட்டது இவற்றில் 50 வீதம் அந்நோயால் அழிந்தது. (வெ)

## அமிர்---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இவர்கள் நடத்திய ஆலோசனை தொடர்பாக விபரங்கள் எதுவும்வெளியிடப்படவில்லை.

திரு. அமிர்தலிங்கம் சென்னையில் தங்கியிருந்தபோது புதுடில்லி சென்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியையும், இந்திய பிரதமரின் சிறப்புத்தூதுவர் திரு. ஜி பார்த்தசாரதியையும், இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவையும், இதர இந்தியத்தலைவர்களையும் சந்தித்து கொழும்பு வட்டமேசை மகாநாடு பற்றிய விபரங்களை அவர்களுக்கு விளக்கியிருந்தார்.

### 2 வாரம் நடைபெறும்

கொழும்பில் இன்று ஆரம்பமாகும் வட்டமேசை மகாநாட்டின் இரு குழுக்களின் கூட்டம் இரு வாரங்களுக்கு நடைபெறுமென்று தெரிவிக்கப்பட்டது. (வெ)

## பெருவெள்ள---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மன்னாரில் கடந்த மூன்று நாட்களாகத் தொடர்ந்து கடும்மழை பெய்துவருகிறது.

மன்னார்- தலைமன்னார் வீதிகளில் வெள்ளம்பாய்கிறது பாலியாறு வெள்ளத்தால் நிரம்பியுள்ளது.

மன்னாரிலுள்ள பலவீடுகளில் வெள்ளம் புகுந்துள்ளது இங்குள்ள பெரும்பாலான தொலைபேசிகள் இயங்கவில்லை சங்குப்பிட்டி தனியார் பஸ்சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

### முல்லைத்தீவு

முல்லைத்தீவில் கடந்த சில தினங்களாக பெய்த பெருமழையில் 30,000 ஏக்கர் நெற்செய்கை பாதிக்கப்பட்டதோடு 8000 குடும்பங்கள் வீடிழந்துள்ளன.

நேற்று இரவு முல்லைத்தீவில் 275 4 மி. மீற்றர் மழைபெய்திருக்கிறது. முல்லைத்தீவில் தற்போது அறுவடைகாலமானதால் இந்தமழையினால் பெருமளவு நட்டம் ஏற்பட்டுள்ளதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. ஞானச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

### மட்டக்களப்பு

மட்டக்களப்பில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஐந்து வயதுக்கு கீழ்ப்பட்டவர்களுக்கு 90 ரூபா வீதமும் ஏனையோருக்கு 25 ரூபா வீதமும் ஒரு வார காலத்துக்கு நிவாரணம் வழங்க அரசாங்க அதிபர் திரு. எம். அந்தோனிமுத்து நடவடிக்கை எடுத்துள்ளார்.

வெள்ளப் பெருக்கு காரணமாக மட்டக்களப்பில் மட்டும் 50 ஆயிரம் மக்கள் பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர், கிரான், வாகரை, கொக்கட்டிச்சோலை போன்ற பகுதிகளே மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

பதவிநிலை உத்தியோகத்தர்கள் அல்லாத ஊழியர்களுக்கு 500 ரூபா சம்பள முற்பணம் வழங்கபொது நிர்வாகஅமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

பெருமழையினால் அம்பாறையில் 35 000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், [illegible] வீதி, 23-ம் இலக்க அச்சகத்தில் 1984-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under Number B 100236/81. Eelanadu- P. O. Box 49, Telephone: 22389 — 24126.